இதயம் மேட்ரிமோனிக்கு வாங்க
சந்தோசமா கல்யாணம் பண்ணிக்கிட்டு போங்க
இதயம் மேட்ரிமோனி
அறிமுக சலுகை
பதிவு இலவசம்
www.IdhayamMatrimony.com
Email: admin@idhayammatrimony.com

# தினபூமி

thinaboomi.com

இதயம் மேட்ரிமோனிக்கு வாங்க
சந்தோசமா கல்யாணம் பண்ணிக்கிட்டு போங்க
இதயம் மேட்ரிமோனி
அறிமுக சலுகை
பதிவு இலவசம்
www.IdhayamMatrimony.com
Email: admin@idhayammatrimony.com





**இஸ்ரேல் சரமாரி தாக்குதல்: காசாவில் மருத்துவர்கள் உட்பட 87 பேர் உயிரிழப்பு**

...2-ம் பக்கம்

**இளம் தம்பதியினர் அதிக குழந்தைகளை பெற்றுக்கொள்ள ஆந்திர முதல்வர் அறிவுரை**

...3-ம் பக்கம்

**பெங்களூரு முதல் டெஸ்ட்: இந்திய அணியை வீழ்த்தி நியூசிலாந்து அபார வெற்றி**

...7-ம் பக்கம்





● தனது சொந்த தொகுதியான உத்தர பிரதேசத்தின் வாரணாசி நகருக்கு சென்ற பிரதமர் மோடி நேற்று, ரூ.6,100 கோடி மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைத்தார். அருகில் உ.பி., கவர்னர் ஆனந்திபென் பட்டேல், முதல்வர் யோகி ஆதித்யநாத், துணை முதல்வர் கேசவ் பிரசாத் மவுரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர்.

### வாரணாசியில் ரூ.6,100 கோடியில்

# புதிய திட்டங்களை தொடங்கி வைத்தார் பிரதமர் நரேந்திரமோடி

வாரணாசி, அக். 21-

தனது சொந்த தொகுதியான வாரணாசி சென்ற பிரதமர் மோடி அங்கு ரூ.6,100 கோடி மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைத்தார்.

உத்தர பிரதேசத்தின் வாரணாசி நகருக்கு பிரதமர் மோடி நேற்று பயணம் மேற்கொண்டார் ரூ.6,100 கோடி மதிப்பிலான திட்டங்களை அவர் தொடங்கிவைத்தார். நேற்று 2 மணியளவில் ஆர்.ஜே.சங்கரா கண் மருத்துவமனையையும் அவர் தொடங்கி வைத்தார்.

இதன்பின்னர், மாலை 4.15 மணியளவில் வாரணாசி நகரில் பல்வேறு வளர்ச்சி பணிகளுக்கான அடிக்கல்லை அவர் நாட்டினார். ஆக்ரா விமான நிலையத்தில் ரூ.570 கோடி மதிப்பில், தர்பங்கா விமான நிலையத்தில் ரூ.910 கோடி மதிப்பில், பக்தோக்ரா விமான நிலையத்தில் ரூ.1,550 கோடி மதிப்பில் குடிமக்களுக்கான புதிய பகுதிக்கான அடிக்கல்லையும் அவர் நாட்டினார்.

ரேவா விமான நிலையம், மா மகாமாயா விமான நிலையம், அம்பிகாபூர் மற்றும் சர்சவா விமான நிலையம் ஆகியவற்றில் புதிய முனைய கட்டிடங்களையும் அவர் ரூ.220 கோடி மதிப்பில் திறந்து வைத்தார். விளையாட்டுக்கு உயர்தர உட்கட்டமைப்பை வழங்கும் நோக்குடன், ரூ.210 கோடி மதிப்பில் வாரணாசி விளையாட்டு வணிகத்தின் 2-வது மற்றும் 3-வது கட்ட மறுவளர்ச்சிக்கான திட்டங்களையும் அவர் தொடங்கி வைத்தார்.

### தீபாவளி பண்டிகை அன்று

# பட்டாசு வெடிக்க 2 மணி நேரம் மட்டுமே அனுமதி

## தமிழக மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் உத்தரவு

சென்னை, அக். 21-

தமிழகத்தில் தீபாவளிக்கு பட்டாசு வெடிக்க நேரக்கட்டுப்பாடுகளை விதித்த தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், காலை 6 முதல் 7 மணி வரையிலும், இரவு 7 முதல் 8 மணி வரையிலும் மட்டுமே பட்டாசு வெடிக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

**புதிய பட்டாசுகள்...**

தீபாவளி என்றாலே புத்தாடை, இனிப்பு பலகாரங்கள், புதுபடங்களின் ரிலீஸ் என எல்லாம் இருந்தாலும், பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை நம் அனைவரது நினைவுக்கும் வருவது பட்டாசுகள் தான். தீபாவளிக்கு முதல் நாள் இரவில் இருந்தே பட்டாசு வெடிக்க ஆரம்பித்துவிடுவார்கள். அதற்கு ஏற்றார் போல் ஆண்டுதோறும் விதவிதமான பட்டாசுகள் விற்பனைக்கு வந்துகொண்டிருக்கின்றன.

**சுப்ரீம் கோர்ட்...**

இந்த சூழலில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நாள் முழுவதும் வெடிக்கப்படும் பட்டாசுகளால் சுற்றுச்சூழல் மாசு பெரும் அளவில் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. இதனால் பட்டாசு வெடிப்பதற்கு என சுப்ரீம்கோர்ட்டு சில கட்டுப்பாடுகள் விதித்தது. அதன்படி, மாநில அரசுகளும் தங்களது மாநிலங்களில் கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றன. கடந்த சில ஆண்டுகளாக தமிழ்நாடு அரசு பட்டாசு வெடிக்க நேரக் கட்டுபாடு விதித்து வருகிறது.

**நேரக் கட்டுப்பாடு...**

இந்த நிலையில், தீபாவளி பண்டிகை வருகிற 31-ம் தேதி கொண்டாடப்பட உள்ளது. வழக்கமாக இந்த ஆண்டும் தமிழ்நாடு அரசு நேரக் கட்டுப்பாட்டை அறிவிக்குமா? அல்லது தளர்வுகள் ஏதாவது இருக்குமா? என மக்கள் ஆவலுடன் காத்திருந்தனர். இந்நிலையில், தீபாவளி பண்டிகை அன்று இரண்டு மணி நேரம் மட்டுமே பட்டாசு வெடிக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி வழங்கி உள்ளது. கடந்த ஆண்டைப் போலவே, இந்த ஆண்டும் தீபாவளி நாளில் காலை 6 மணி முதல் காலை 7 மணி வரையும், இரவு 7 மணி முதல் இரவு 8 மணி வரை மட்டுமே பட்டாசுகள் வெடிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**பசுமை பட்டாசுகள்...**

பொதுமக்கள் குறைந்த ஒலியுடனும், குறைந்த அளவில் காற்று மாசுபடுத்தும் தன்மையும் கொண்ட பசுமை பட்டாசுகளை மட்டுமே வெடிக்க வேண்டும். மாவட்ட நிர்வாகம், உள்ளாட்சி அமைப்புகளின் முன் அனுமதியுடன், பொதுமக்கள் திறந்த வெளியில் ஒன்று கூடி கூட்டாக பட்டாசுகளை வெடிப்பதற்கு அந்தந்த பகுதிகளில் உள்ள நலச் சங்கங்கள் ஏற்பாடு செய்யலாம்.

**சரவெடிகளை தவிர்க்க...**

அதிக ஒலி எழுப்பும் மற்றும் தொடர்ச்சியாக வெடிக்கக் கூடிய சரவெடிகளை தவிர்க்க வேண்டும். மருத்துவமனைகள், வழிபாட்டு தலங்கள் மற்றும் அமைதி காக்கப்படும் இடங்களில் பட்டாசு வெடிப்பதை தவிர்க்க வேண்டும். குடிசை பகுதிகள் மற்றும் எளிதில் தீப்பற்றக் கூடிய இடங்களுக்கு அருகில் பட்டாசு வெடிப்பதை தவிர்க்க வேண்டும். அரசு வழங்கியுள்ள அறிவுறுத்தல்களை பொதுமக்கள் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் எனத் கூறப்பட்டுள்ளது.

### என்னென்ன கட்டுப்பாடுகள்?

1. குறைந்த அளவில் காற்று மாசுபடுத்தும் பசுமை பட்டாசுகளை மட்டுமே வெடிக்க வேண்டும்.
2. பொதுமக்கள் திறந்த வெளியில் ஒன்று கூடி கூட்டாக பட்டாசுகளை வெடிக்க முயற்சிக்க வேண்டும்.
3. அதிக ஒலி எழுப்பும் மற்றும் தொடர்ச்சியாக வெடிக்க கூடிய சரவெடிகளை தவிர்க்க வேண்டும்.
4. மருத்துவமனைகள், வழிபாட்டுத் தலங்கள் உள்ள இடங்களில் பட்டாசுகள் வெடிப்பதை தவிர்க்க வேண்டும்.
5. குடிசை பகுதிகள், எளிதில் தீப்பற்றக் கூடிய இடங்களுக்கு அருகில் பட்டாசு வெடிப்பதை தவிர்க்க வேண்டும்.

### சேலம், நாமக்கல்லில் ரூ.33.26 கோடி மதிப்பிலான

# நலத்திட்ட உதவிகளை வழங்கினார் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்

சேலம், அக். 21-

சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 3,583 பயனாளிகளுக்கு ரூ.33.26 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். விழாவில் பாராலிம்பிக்கில் தமிழகம் சார்பாக பங்கேற்ற வீரர்கள், வீராங்கனைகளும் கவுரவிக்கப்பட்டனர்.

சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் உள்ள கிராம ஊராட்சிகளுக்கு, கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா நேற்று காலை நேரு கலையரங்கில் நடந்தது. இந்த விழாவிற்கு தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமை வகித்து, சேலம், நாமக்கல் மாவட்டங்களில், 707 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த 1,500 வீரர்களுக்கு பல்வேறு வகையான விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். பின்னர், மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும், கலைஞர் விளையாட்டு உபகரணங்களை கொண்டு செல்லும் வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார். அத்துடன், 3,583 பயனாளிகளுக்கு ரூ.33.26 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது,

துணை முதல்வராக முதல் முறையாக சேலம் வந்து கலைஞர் விளையாட்டு உபகரணத் திட்டத்தை தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். மாநிலம் முழுவதும் 12,575 கிராம ஊராட்சிகளுக்கு ரூ.86 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகிறது. கடந்த பிப்ரவரியில் இந்த திட்டம் தொடங்கப்பட்டு 26 மாவட்டங்களில் இது வரை வழங்கப்பட்டுள்ளது.

இந்தவிழாவில் பாராலிம்பிக் வீரர்கள் தங்கவேலு மாரியப்பன், துளசிமதி முருகேசன் இருவரும் வி.ஐ.பி.க்களாக பங்கேற்றுள்ளனர். இவர்கள் தேசிய, சர்வதேச அளவில் பதக்கங்களை குவித்து வருகின்றனர். இது பலருக்கும் ஊக்கமளித்து வருகிறது. கடந்த முறை 6 லட்சம் பேர் கலந்து கொண்ட நிலையில், இந்த வருடம் 11 லட்சம் பேர் பங்கேற்றுள்ளனர். இதுவே இந்த திட்டம் வெற்றியடைந்ததற்கான எடுத்துக்காட்டாக உள்ளது.

முதல்வர் கடந்த 3 ஆண்டுகளில் 3350 பேருக்கு ரூ.110 கோடி உயரிய ஊக்கத்தொகை வழங்கியுள்ளார்.

விளையாட்டு வீரர்கள் 100 பேருக்கு விரைவில் அரசு பணி வழங்கப்படும். விளையாட்டு வீரர்களுக்கு மட்டுமல்ல, மகளிர் உள்பட அனைவருக்கும் திராவிட மாடல் ஆட்சி தான் பொற்கால ஆட்சியாக உள்ளது. கிராமப்புறங்களுக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுவது போல், நகர்புறங்களுக்கு விரிவுப்படுத்தப்படும். 60 பேர் தங்கி பயிற்சி பெறும் வகையில், ரூ.7 கோடியில் விரைவில் விளையாட்டு விடுதி அமைக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

இவ்விழாவில் பாராலிம்பிக் தொடரில் உயரம் தாண்டுதல் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாரியப்பன் தங்கவேலு, பேட் மிண்டன் மகளிர் ஒற்றையர் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற தமிழக வீராங்கனை துளசிமதி முருகேசன் ஆகியோர் கவுரவிக்கப்பட்டனர்.

அமைச்சர்கள் மதிவேந்தன், ராஜேந்திரன் ஆகியோர் பேசினர். செல்வகணபதி எம்.பி. உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தமிழகத்திற்கு அதிக மழை பாதிப்பு இல்லை:

# வங்கக்கடலில் வரும் 23-ல் உருவாகிறது ‘டானா’ புயல்

## இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, அக். 21-

வங்கக்கடலில் வரும் 23 ஆம் தேதி புயல் உருவாக இருப்பதாகவும், அந்தப் புயலுக்கு 'டானா' என பெயரிடப்பட்டுள்ளது எனவும் இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ள தகவலின்படி, மத்திய கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய வடக்கு அந்தமான் கடல் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளது. தொடர்ந்து அக்டோபர் 23 ஆம் தேதி காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுப்பெற உள்ளது.

பின்னர் புயல் உருவாகி, தமிழக கடற்கரை பகுதிகளை விட்டுவிலகி, ஒடிசா மற்றும் மேற்கு வங்கத்தை நோக்கி நகர்வதால் தமிழகத்திற்கு எந்த பாதிப்பும் இருக்காது என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த புயலுக்கு கத்தார் பரிந்துரைத்த 'டானா' (DANA) என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

வங்கக்கடல் பகுதிகளில் அக்.,21-ம் (இன்று) தேதி அந்தமான் கடல் பகுதிகள், மத்தியகிழக்கு மற்றும் அதனை ஒட்டிய மத்தியமேற்கு, தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். அக்.,22 ஆம் தேதி மத்தியகிழக்கு மற்றும் அதனை ஒட்டிய மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும், அந்தமான் கடல் பகுதிகள், மத்திய வங்கக்கடல், தெற்கு வங்கக்கடலின் வடக்கு பகுதிகளில் குறாவளிக் காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

அக்.,23 ஆம் தேதி மத்தியகிழக்கு மற்றும் அதனை ஒட்டிய மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 65 முதல் 75 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 85 இலோ மீட்டர் வேகத்திலும், அந்தமான் கடல பகுதிகள் மத்திய வங்கக் கடல், தெற்கு வங்கக்கடலின் வடக்கு பகுதிகள், வடமேற்கு மற்றும் அதனை ஒட்டிய வடகிழக்கு வங்கக்கடல், ஆந்திரா கடலோர பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே SS கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக் கூடும்.

அக்.,24 ஆம் தேதி வடமேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 90 முதல் 110 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 120 கிலோ மீட்டர் வேகத்திலும், மத்தியமேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்தியகிழக்கு வடகிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 65 முதல் 75 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே B5 கிலோ மீட்டர் வேகத்திலும், மத்திய வங்கக்கடல், வடக்கு வங்கக்கடல், தெற்கு வங்கக்கடல், ஆந்திரா கடலோர பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

அரபிக்கடல் பகுதிகள்: அக்.,21 (இன்று ) ஆம் தேதி மத்திய அரபிக்கடலின் மத்திய பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதியில் மீன்பிடிக்க வேண்டாமென அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மகாராஷ்டிர சட்டப்பேரவை தேர்தல்:

# முதல் வேட்பாளர் பட்டியலை வெளியிட்டது பாரதிய ஜனதா

மும்பை, அக். 21-


மகாராஷ்டிர சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிட உள்ள 99 வேட்பாளர்கள் அடங்கிய முதல் பட்டியலை பாஜக வெளியிட்டுள்ளது. துணை முதல்வர் தேவிந்திர பட்நாவிஸ் தனது கோட்டையான தென்மேற்கு நாக்பூரில் போட்டியிடுகிறார்.

மகாராஷ்டிர பாஜக தலைவர் சந்திரசேகர் பவன்குலே கம்தி தொகுதியிலும், பாஜக தலைவரும் மாநிலங்களவை உறுப்பினருமான அசோக் சவானின் மகள், ஸ்ரீஜெய சவான் போகர் தொகுதியிலும் போட்டியிடுகிறார்கள். மும்பை பாஜக தலைவர் ஆஷிஸ் சேலார் மேற்கு வந்த்ரே தொகுதியிலும், கட்சியின் மூத்த தலைவரும், மக்களவை உறுப்பினருமான நாராயண் ரானேவின் மகன் நிதிஸ் ரானே தான் தற்போது எம்எல்ஏவாக இருக்கும் கன்கவ்லியில் போட்டியிருகிறார்.

மாராஷ்டிராவில் உள்ள 288 தொகுதிகளுக்கு நவம்பர் 20ம் தேதி வாக்குப் பதிவு நடைபெறுகிறது. வாக்குகள் நவம்பர் 23 தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. மாநிலத்தில் பாரதிய ஜனதா கட்சி, ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனா, அஜித் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் கட்சி ஆகியவை மகாயுதி கூட்டணியில் போட்டியிடுகின்றன. இந்தக் கூட்டணியில் கட்சிகளுக்கு இடையேயான தொகுதிப் பங்கீடு இன்னும் முடிவாகவில்லை. இந்தத் தேர்தலில் பாஜக 150 தொதிகளில் போட்டியிடுவதை நோக்கமாக கொண்டுள்ளது. கடந்த 2019ம் ஆண்டு பேரவைத் தேர்தலில் பாஜக 105 தொகுதிகளிலும், சிவசேனா (உத்தவ்தாக்கரே - ஏக்நாத் ஷிண்டே ஒன்றிணைந்து) 56 தொகுதிகளிலும், காங்கிரஸ் 44 தொகுதிகளிலும் வெற்றி பெற்றிருந்தன. அதேபோல் 2014 சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக 122 இடங்களிலும், சிவசேனா 63 தொகுதிகளிலும், காங்கிரஸ் 42 இடங்களிலும் வெற்றி பெற்றிருந்தன.

இதனிடையே, 2024ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் பாஜக தலைமையிலான மகாயுதி கூட்ட ணி 48 இடங்களில் 17 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. அதேநேரத்தில் காங்கிரஸ் தலைமையிலான மகா விகாஸ் அகாதி (எம்விஏ) 30 இடங்களில் வெற்றி பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| 218.14 | 104.20 |
| பாயிண்ட் 81,244.75 | பாயிண்ட் 24,854.05 |



**தங்கம்**
1 சவரன் ₹58,240
1 கிராம் ₹7,280



**வெள்ளி**
1 கிலோ ₹107,000
1 கிராம் ₹107.00

**டாலர்** ₹84.07

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



### இஸ்ரேல் சரமாரி தாக்குதல்:
# காசாவில் மருத்துவர்கள் உட்பட 87 பேர் உயிரிழப்பு

**ஜெருசலேம், அக். 21-**

வடக்கு காசாவில் இஸ்ரேல் ராணுவம் நடத்திய தாக்குதலில் மருத்துவர்கள் உட்பட 87 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மேற்காசிய நாடான இஸ்ரேலுக்குள் புகுந்து கடந்த ஆண்டு அக்டோபர் 7-ம் தேதி ஹமாஸ் பயங்கரவாத அமைப்பினர் கொடூர தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் காசாவில் இஸ்ரேல்2 தாக்குதல் நடத்தி வருகிறது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் வீட்டை நோக்கி, ஹிஸ்புல்லா பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் டிரோன்' தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், பாலஸ்தீனத்தின் காசா நகரின் மீதும் லெபனான் தலைநகர் பெய்ரூட் மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி திட்டமிட்டுள்ளது.



வடக்கு காசாவில் உள்ள பெய்ட் லாஹியா பகுதியில் வீடுகள் மற்றும் அடுக்கு மாடி குடியிருப்புகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் மருத்துவர்கள் உட்பட குறைந்தது 87 பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த 2 வாரத்தில் மட்டும் 400 பேர் வரை இஸ்ரேல் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளதாக காசா சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. லெபனானில் பெய்ரூட் மீது தாக்குதல் நடத்தும் இஸ்ரேல் அங்குள்ள மக்களை வெளியேறும்படி உத்தரவிட்டுள்ளது. இதனால் அங்கு பதற்றமான சூழல் நிலவுகிறது.

### நெல்லை நீட் பயிற்சி மைய
# உரிமையாளரை பிடிக்க கேரளா விரைந்த தனிப்படை போலீசார்

**திருவனந்தபுரம்,அக். 21-**

நீட் பயிற்சி மைய உரிமையாளரை பிடிக்க தனிப்படை கேரளாவில் முகாமிட்டுள்ளது

நெல்லை புதிய பஸ் நிலையம் பகுதியில் ஜல் நீட் அகாடமி என்ற தனியார் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. இதன் உரிமையாளரான கேரளாவை சேர்ந்த ஜலாலுதீன் அகமது பயிற்சியாளராகவும் செயல்பட்டு வந்தார்.

இவர் பயிற்சி மையத்தில், மாணவர்களை பிரம்பால் சரமாரியாக தாக்கியும், மாணவிகள் மீது காலணியை தூக்கி வீசியும் உள்ளார். இந்த வீடியோ காட்சிகள் வலைதளங்களில் பரவி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இது குறித்து மாணவர்களின் பெற்றோர் மற்றும் மாவட்ட குழந்தைகள் நல அலுவலகம் சார்பில் மேலப்பாளையம் போலீஸ் நிலையத்தில் புகார்கள் அளிக்கப்பட்டன. அதன் பேரில் போலீசார், ஜலாலுதீன் அகமது மீது 3 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர்.

இதை அறிந்த அவர் உடனடியாக கேரளாவுக்கு தப்பிச் சென்று விட்டார். நெல்லை மாநகர போலீஸ் கமிஷனர் ரூபேஷ் குமார் மீனா உத்தரவுப்படி ஜலாலுதீன் அகமதுவை பிடிக்க இரண்டு தனிப்படைகள் அமைக்கப்பட்டு உள்ளது.

இதன்படி ஆய்வாளர்கள் மாரியப்பன், விஜி தலைமையிலான தனிப்படை போலீசார் தற்போது கேரளா மாநிலத்தில் முகாமிட்டுள்ளனர். அங்கு அவரது வீடு மற்றும் நண்பர்கள் வீடுகளுக்கு சென்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

விரைவில் கைது செய்ய தீவிர முயற்சி மேற்கொண்டு வருவதாக போலீஸ் அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர். இதனிடையே பாதிக்கப்பட்ட மாணவர்கள், நீட் பயிற்சி மைய ஊழியர்கள்,, முன்னாள் ஊழியர்கள், முன்னாள் மாணவர்கள் போன்ற பலருக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# ஆப்பிரிக்க சுற்றுப்பயணம் நிறைவு: இந்தியா திரும்பினார் ஜனாதிபதி

**புதுடெல்லி, அக். 21-**

ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு முதல் முறையாக அரசு முறை சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அதன்படி அல்ஜீரியா, மொரிடேனியா மற்றும் மலாவி ஆகிய 3 நாடுகளில் அவர் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இந்தப் பயணத்தின் முதல் பகுதியாக கடந்த 13-ம் தேதி அல்ஜீரியா நாட்டின் அல்ஜீர்ஸ் நகர் சென்றடைந்த ஜனாதிபதி முர்முவை அந்நாட்டு ஜனாதிபதி அப்தில் மஜித் திபவுன் மற்றும் அவருடைய மந்திரி சபை உறுப்பினர்கள் வரவேற்றனர். அந்நாட்டுக்கு பயணம் மேற்கொண்ட முதல் இந்திய ஜனாதிபதி என்னும் பெருமையை முர்மு பெற்றார்.

இதையடுத்து, தனது சுற்றுப்பயணத்தின் இரண்டாவது பகுதியாக மொரிடேனியா நாட்டிற்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு சென்றார். அவரை அந்நாட்டின் ஜனாதிபதி முகமது ஆல்ட் கசோனி வரவேற்றார். தலைநகர் நாக்சாட்டில் இந்திய சமூகத்தினருடன் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் திரவுபதி முர்மு கலந்து கொண்டார்.

தொடர்ந்து, தனது சுற்றுப்பயணத்தின் நிறைவு பகுதியாக மலாவி நாட்டிற்கு சென்ற ஜனாதிபதி திரவுபதி முர்முவை, அந்நாட்டின் துணை ஜனாதிபதி மைக்கேல் யூசி நேரில் சென்று வரவேற்றார். அதன்பின் மலாவி ஜனாதிபதி லாசரஸ் சக்வேராவை சந்தித்து திரவுபதி முர்மு பேச்சுவார்த்தை நடத்தினார். மலாவி நாட்டிற்கு மனிதாபிமான உதவியாக 1,000 மெட்ரிக் டன் அரிசி, சுகாதார ஒத்துழைப்பின் அடையாளமாக புற்றுநோய் சிகிச்சை இயந்திரம் ஆகியவற்றை திரவுபதி முர்மு வழங்கினார். இந்நிலையில், ஜனாதிபதி திரவுபதி முர்மு ஆப்பிரிக்க நாடுகள் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று அதிகாலை டெல்லி திரும்பினார். அவரை அதிகாரிகள் வரவேற்றனர்.

### வட்ட செயலாளர் வக்கீல் பாலமுருகன் ஏற்பாட்டில் மதுரையில்
# அ.தி.மு.க. கொடியை ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகளை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ வழங்கினார்



**மதுரை, அக் 21-**

மதுரை மாநகர் 70-வது வட்ட அ.தி.மு.க.செயலாளர் வக்கீல் பாலமுருகன் ஏற்பாட்டில் அ.தி.மு.க.கொடியினை ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகளை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ.வழங்கினார்.

அ.தி.மு.க.வின் 53-வது ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட மேற்கு 3-ம் பகுதி 70-வது வட்ட அ.தி.மு.க.சார்பில் வட்ட செயலாளர் வழக்கறிஞர் பாலமுருகன் ஏற்பாட்டில் பைபாஸ் ரோடு நேருநகரில் அ.தி.மு.க.கட்சி கொடியினை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ எம்.எல்.ஏ. ஏற்றி வைத்தார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், வி.பி.ஆர்.செல்வகுமார், கு.திரவியம், சக்திமோகன், எம்.எஸ்.கே.மல்லன், ஏ.பார்த்திபன், பைக்காரா கருப்பசாமி, பகுதி முத்துவேல், வக்கீல் தமிழ்செல்வன், பி.கே.எம். மாரிமுத்து, பி.ஆர்.சி.மகாலிங்கம், மார்க்கெட் மார்நாடு, தங்கபாண்டி, சி.ஆர்.கதிரவன், ராஜாசீனிவாசன், இளைஞரணி கண்ணன், லக்கிமுனீஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

பின்னர் மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க.செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. பேசியதாவது-

அ.தி.மு.க.பொதுச்செயலாளர் எடப்பாடியாரின் ஆணைக்கிணங்க தமிழகம் முழுவதும் அ.தி.மு.க.வின் 53- ஆம் ஆண்டு துவக்க விழா நிகழ்ச்சி மற்றும் பொதுக்கூட்டம் நடைபெற்றுவருகிறது. அதன் படி மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க.சார்பில் பல்வேறு இடங்களில் கட்சி கொடியினை ஏற்றி பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கி வருகிறோம். இன்றைக்கு மேற்கு 3- ம் பகுதி 70- வட்ட அ.தி.மு.க.சார்பில் பைபாஸ் ரோடு நேருநகர் பகுதியில் இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சியை 70- வது வட்ட அ.தி.மு.க.செயலாளர் வக்கீல் பாலமுருகன் தலைமையில் இந்த கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்று கொண்டிருக்கிறகு. தி.மு.க.ஆட்சியில் இன்றைக்கு வழக்கறிஞர் பாலமுருகன் எதிர்நீச்சல் போட்டு தான் இந்த நிகழ்ச்சியை நடத்தி கொண்டிருக்கிறார். அந்த அளவுக்கு தி.மு.க.வின் அராஜகம் அரங்கேறி வருகிறது.

இன்றைக்கு தமிழ்நாடு போதை மாநிலமாக இருந்து கொண்டிக்கிறது. அ.தி.மு.க.ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டங்களை தான் தி.மு.க.ஆட்சியில் ஸ்டிக்கர் ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். அ.தி.மு.க.ஆட்சி காலத்தில் மதுரைக்கு பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை செய்துள்ளோம். உதாரணமாக காளவாசல் பகுதியில் மேம்பாலம், வைகை ஆற்றின் இருபுறமும் சாலை வசதி, ஸ்மார்ட் சிட்டித்திட்டத்தின் கீழ் பல்வேறு வளர்ச்சி திட்டபணிகளை மேற்கொண்டிருக்கிறோம். மதுரை சீர்மிகு நகமாக காட்சி அளித்தது. இன்றைக்கு எங்கு பார்த்தாலும் கொலை,கொள்ளை சர்வசாதரணமாக நடந்து வருகிறது. விரைவில் வருஇருக்கின்ற 2026-ம் ஆண்டு சட்டமன்ற பொதுத்தேர்தலில் மதுரை மாநகரில் உள்ள 4 தொகுதிகள், மதுரை மாவட்டத்தில் உள்ள 10 தொகுதிகளிலும் வலுவான களப்பணியாற்றி வெற்றி பெற்று எடப்பாடியாரை கோட்டையில் அமர வைத்து மீண்டும் அம்மாவின் ஆட்சி மலர உறுதி ஏற்போம்.

வருகிற 30- ம் தேதி பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரின் குருபூஜைவிழா நடக்கிறது. இந்த குருபூஜையில் கலந்து கொள்வதற்காக நமது பொதுச்செயலாளர் எடப்பாடியார் வருகை தர இருக்கிறார். அவருக்கு மாநகர் மாவட்ட அ.தி.மு.க.சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட இருக்கிறது. எனவே நமது கட்சிநிர்வாகிகள், தொண்டர்கள் அ.தி.மு.க.ஆட்சியின் சாதனைகளை மக்களிடத்தில் எடுத்துக்கூறி நமது கட்சியின் வெற்றிக்கு பாடுபட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# தினமும் ஒருவருக்கு ஒரு மில்லியன் டாலர் பரிசு: எலான் மஸ்க் அறிவிப்பு

**வாஷிங்டன், அக். 21-**

அமெரிக்க அரசியல் சாசனத்திற்கு ஆதரவு அளிக்கும் வகையில் ஆன்லைன் வாயிலாக விண்ணப்பம் ஒன்றை எலான் மஸ்க் துவக்கி உள்ளார். இதற்கு ஆதரவு அளிப்பவர்களில் ஒருவருக்கு தினமும் ஒரு மில்லியன் டாலர் பரிசு வழங்குவதாக எலான் மஸ்க் அறிவித்து உள்ளார்.

டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் சி.இ.ஓ.,வும், டுவிட்டர் வலைதளத்தின் உரிமையாளருமான எலான் மஸ்க், அமெரிக்க அதிபர் தேர்தலில், குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்டு டிரம்ப்பை ஆதரித்து வருகிறார். அவருக்கு ஆதரவாக அறிக்கை, சமூக வலைதள பதிவுகளை வெளியிட்ட எலான் மஸ்க், பொதுக்கூட்டத்திலும் டிரம்ப் உடன் இணைந்து பங்கேற்றார்.

டிரம்ப்பிற்கும், ஜனநாயக கட்சியின் அதிபர் வேட்பாளர் கமலா ஹாரீசுக்கும் இடையே போட்டி கடுமையாக உள்ளது. இதனையடுத்து, டிரம்ப் பிரச்சார குழுவிற்கு உதவும் வகையில், அரசியல் நடவடிக்கை அமைப்பு ஒன்றை ஆன்லைன் வாயிலாக எலான் மஸ்க் துவக்கி உள்ளார்.

இதன் மூலம் போட்டி கடுமையாக இருக்கும் மாநிலங்களில் வாக்காளர்களை ஒருங்கிணைப்பதும், பதிவு செய்வதும் ஓட்டளிக்க வைப்பதும் இதன் முக்கிய பணியாகும். ஒன்று சேர்த்து அவர்களின் ஆதரவை பெறுவதற்காக இந்த அமைப்பு உருவாக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில், டிரம்ப்பிற்கு ஆதரவு அளிக்கும் வகையில் அடுத்த கட்ட நடவடிக்கையாக, அமெரிக்க அரசியல் சாசனத்திற்கு ஆதரவு அளிக்கும் வகையில் ஆன்லைன் வாயிலாக விண்ணப்பம் ஒன்றை எலான் மஸ்க் துவக்கி உள்ளார். இதற்கு ஆதரவு அளிப்பவர்களில் ஒருவருக்கு தினமும் ஒரு மில்லியன் டாலர் பரிசு வழங்குவதாக எலான் மஸ்க் அறிவித்து உள்ளார். இதோடு நிற்காமல், முதல்நபராக பென்சில்வேனியாவை சேர்ந்த ஜான் டிரெஹர் என்பவருக்கு அந்த பரிசை வழங்கி உள்ளார்.

# அமெரிக்காவில் நடந்த துப்பாக்கி சூடு சம்பவத்தில் 3 பேர் உயிரிழப்பு

**வாஷிங்டன், அக். 21-**

அமெரிக்காவின் மிசிசிபி மாகாணம் ஹொல்மெஸ் நகரில் பள்ளிகளுக்கு இடையேயான கால்பந்து போட்டியில் அப்பகுதியை சேர்ந்த பள்ளி சாம்பியன் பட்டம் வென்றது. இதையடுத்து, இந்த வெற்றியை கொண்டாட நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அந்த நிகழ்ச்சி நேற்று நடைபெற்ற நிலையில அப்போது அங்கு அந்த இரு தரப்பினர் இடையே மோதல் ஏற்பட்டது. இந்த மோதலின் போது திடீரென துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது.

இந்த துப்பாக்கி சூட்டில் 3 பேர் உயிரிழந்தனர். மேலும், 8 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த போலீசார் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். மேலும், இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மகராஷ்டிர சட்டசபை தேர்தல் அட்டவணையில் பா.ஜ.க. சதி: சஞ்சய்ராவத் குற்றச்சாட்டு

**மும்பை, அக். 21-**

இந்திய தேர்தல் ஆணையத்தின் மகராஷ்டிரா தேர்தல் அட்டவணை ஆட்சி அமைப்பதற்கு 48 மணி நேரம் மட்டுமே அவகாசம் வழங்குகிறது. இது மகா விகாஸ் அகாதி ஆட்சி அமைக்க உரிமை கோர முடியாது என்பதை உறுதி செய்யும் பா.ஜ.க.வின் சதி என்று சிவசேனாவின் சஞ்சய் ராவத் குற்றம் சாட்டியுள்ளார்.

சிவசேனாவை (உத்தவ் அணி) சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் சஞ்சய் ராவத் நேற்றுசெய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது,

மகராஷ்டிரா சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெறாது என்பதை அமித் ஷாவுடன் அக்கட்சியும் ஏற்றுக் கொண்டிருப்பதாக தெரிகிறது. அதனால் மகா விகாஸ் அகாதி கூட்டணி ஆட்சி அமைப்பது பற்றி விவாதித்து முடிவெடுக்கும் நேரத்தைக் குறைப்பதற்கான ஒரு யுக்தி இருப்பதாக தெரிகிறது.

ஒருவேளை மகா விகாஸ் அகாதி (எம்.வி.ஏ) ஆட்சியமைக்க உரிமை கோர தவறினால் அடுத்த ஆறு மாதத்துக்கு ஜனாதிபதி ஆட்சி அமல்படுத்தப்படும். மகா விகாஸ் கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதற்காக பா.ஜ.க. தீவிரமாக செயல்பட்டு வருவதாக தெரிகிறது.

எம்.வி.ஏ. ஆட்சி அமைக்கும் வாய்ப்பை குறைக்கும் வகையில் திறம்பட மகராஷ்டிரா தேர்தல் அட்டவணையை இந்திய தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.

மகராஷ்டிராவில் நவம்பர் 23-ம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். அதாவது, சிவ சேனா (உத்தவ் அணி), காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் மற்றும் சில சிறிய கட்சிகள் ஆட்சி அமைப்பது குறித்து விவாதிக்க 48 மணி நேரம் மட்டுமே அவகாசம் இருக்கும். இது நியாயமற்றது.

தேர்தல் ஆணையத்தின் இந்த செயல் பா.ஜ.க.வின் செய்தித் தொடர்பாளர் போலவே உள்ளது. தேர்தல் ஆணையம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தை ஆதரிக்கிறது. ஆனால் அரியானா தேர்தலில் இந்த இயந்திரங்களில் முறைகேடு நடந்திருப்பதாக புகார் எழுந்த போது மவுனமாக இருக்கிறது.

மக்களவைத் தேர்தலின் போது பணம் முறைகேடாக பயன்படுத்தப்பட்டதாக எழுந்த புகார்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**21-10-2024**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** வழக்குகளை ஒத்திப் போடுவது நல்லது. அதிகாரிகளிடம் பணிவோடு நடப்பது பதவி உயர்வுக்கு உதவும்.. வீட்டில் உள்ள விலை உயர்ந்த பொருட்களை பாதுகாப்பாக வைப்பது அவசியம்.

**ரிஷபம்:-** உங்கள் குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். புதிய ஆராய்ச்சி கல்வியில் தேர்ச்சியும், வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். பெரியோரின் அன்பு பொங்கும். தொழில் வளம் பெருகும்.

**மிதுனம்:-** தேவையற்ற பொருட்களை வாங்கிக் குவித்து பெண்கள் வீட்டுச் செலவுகளை அதிகரிக்கச் செய்வர். செலவுகளைக் குறைத்து பணமுடையைத் தவிர்க்கவும். வீண் அலைச்சல்கள் தவிர்க்க முடியாததாகும்.

**கடகம்:-** மனமகிழ்ச்சி அதிகரிக்கும் வண்ணம் தனவரவு அதிகரிக்கும். ஆரோக்கிய மேம்பாட்டால் ஆனந்தம் பெருகும். கல்வியில் வெற்றி கிடைக்கும். பிரிவால் ஏற்பட்ட துன்பம், இணைவால் மாறும்.

**சிம்மம்:-** புதிய வாய்ப்புகள் கதவைத் தட்டும். அரசு ஆதரவால் உத்தியோக வாய்ப்புகள் பெருகி, வாழ்க்கையில் முன்னேறும் நிலை உருவாகும். தன்னம்பிக்கை, தேகதிடம், தைரியம் ஆகியவை ஓங்கும்.

**கன்னி:-** அனைத்துச் செயல்களிலும் எளிதில் வெற்றி கிடைக்கும். உல்லாசமான புனிதப் பயணங்கள் ஏற்படும். மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும்.

**துலாம்:-** தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். முயற்சியைக் கைவிடாது தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றி துணிவுடன் செயல்களில் இறங்கினால். வெற்றி உறுதி.

**விருச்சிகம்:-** மனைவி மூலம் தனவரவு அதிகரிக்கும். சிலரின் காதல் வெற்றி பெற்று கல்யாணத்தில் முடியும். வியாபாரிகள் தங்கள் சாதுர்யமான பேச்சால் அதிகம் இலாபம் ஈட்டுவர்.

**தனுசு:-** தொழில் மூலம் தனவரவு அதிகரிக்கும். ஆரோக்கியம் மேம்படும். பயண சுகம் ஏற்படும். தனக்கென அழகிய தனி வீடு அமையும். குடும்பத்தில் சுபகாரியங்கள் குதுகலமாய் நிறைவேறும்.

**மகரம்:-** நற்குணம் மாற, கௌரவ குறைச்சல் ஏற்படும். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை.

**கும்பம்:-** தாய் சொல்லைத் தட்டாதீர்கள். தூக்கமின்மையால் சோர்வு ஏற்பட்டு முக்கிய பணிகளில் சுணக்கம் ஏற்படும். பொருட்களைப் பத்திரமாகப் பாதுகாப்பது அவசியம்.

**மீனம்:-** சகோதர ஒற்றுமை ஓங்கும். உழவாரப் பணிகளில் ஈடுபாடு கொள்வார்கள். அனைத்திலும் வெற்றி நிச்சயம். இன்பச் சுற்றுலா பயணங்கள் சென்று மகிழ்வீர்கள்.

# ஈரான் மீது தாக்குதலுக்கு தயாராகும் இஸ்ரேல்: அமெரிக்க உளவுத்துறையில் கசிந்த ஆவணங்கள்

**வாஷிங்டன், அக். 21-**

ஈரான் மீது தாக்குதல் நடத்துவது தொடர்பாக இஸ்ரேலின் முயற்சிகள் குறித்த அமெரிக்க உளவுத் துறையில் 2 ரகசிய ஆவணங்கள் கசிந்துள்ளன.

பாலஸ்தீனம் மீது கடந்த ஒரு வருடமாக தாக்குதல் இஸ்ரேல் நடத்தி வரும் நிலையில் 42 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் உயிரிழந்துள்ளனர். அண்டை நாடான லெபனான் மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்த தொடங்கியுள்ளது.

ஹமாஸுக்கு ஆதரவாக லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா தலைநகர் பெய்ரூட்டில் வைத்து கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து இஸ்ரேல் மீது 180 ஏவுகணைகளை சரமாரியாக ஏவி ஈரான் திடீர் தாக்குதல் நடத்தியது.

இதனால் ஈரான் அணு உலைகள் மற்றும் எண்ணெய் கிணறுகள் மீது தாக்குதல் நடத்த இஸ்ரேல் துடித்து வருகிறது. ஆனால் ஈரான் அணு உலைகள் மீது தாக்குதல் நடத்தப்படாது என்று அமெரிக்கா உறுதி அளித்துள்ளது. இதற்கிடையே ஈரான் மீது சைபர் தாக்குதல் ஒன்றையும் இஸ்ரேல் நடத்தியது. இதில் தங்கள் அரசின் ரகசிய ஆவணகள் திருடப்பட்டதாக ஈரான் குற்றம்சாட்டியது.

இந்நிலையில் ஈரான் மீது தாக்குதல் நடத்துவது தொடர்பாக இஸ்ரேலின் முயற்சிகள் குறித்த அமெரிக்க உளவுத் துறையில் 2 ரகசிய ஆவணங்கள் கசிந்துள்ளன. அமெரிக்காவின் நேஷனல் ஜியோஸ்பாஷியல் இன்டலிஜென்ஸ் ஏஜென்சியில் இருந்த இந்த ஆவணங்களானது டெலிகிராமில் கசிந்துள்ளது. இந்த ஆவணங்களில் ஈரான் தாக்குதலுக்கு இஸ்ரேலிய படைகள் பிரத்யேக பயிற்சி எடுத்துவரும் மற்றும் தாக்குதலுக்கு ஒத்திகை பார்க்கும் சாட்டிலைட் புகைப்படங்கள் இடம்பெற்றுள்ளன.

முதல் ஆவணத்தில் இஸ்ரேல் விமானப் படை ஈரான் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்த எப்படியெல்லாம் தயாராகி வருகிறது என்ற விவரங்கள் இடம்பெற்றுள்ளன. மற்றொரு வானத்தில் ஈரானுக்கு எதிராக இஸ்ரேல் தங்கள் ஏவுகணைகள் மற்றும் ஆயுதங்களை தயார்ப்படுத்தி வருவது குறித்த விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

# தமிழ்த்தாய் வாழ்த்து பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்
## ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தல்

**சென்னை, அக். 21-**

தமிழ்த் தாய் வாழ்த்து விவகாரத்தில் நேர்ந்த தவறுக்கு கவனச் சிதறலே காரணம் என தூர்தர்ஷன் விளக்கம் அளித்துள்ள நிலையில், இந்த பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்று முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது குறித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழக கவர்னர் கலந்து கொண்ட சென்னை தூர்தர்ஷன் அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில், தமிழ்த் தாய் வாழ்த்து பாடும் போது, தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும் என்ற வரி விடுபட்டது மிகப் பெரிய தவறு. இதில் யாருக்கும் எவ்வித மாறுபட்ட கருத்தும் இருக்க முடியாது. இது கவனக் குறைவு காரணமாக ஏற்பட்ட தவறு என்று சென்னை தூர்தர்ஷன் விளக்கம் அளித்திருக்கிறது.

எனவே, இது தூர்தர்ஷன் நிர்வாகம் செய்த தவறு. இதனை, கற்பனை செய்து கொண்டு, கவர்னரை வசைபாடுவது ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல. இந்தக் குற்றச்சாட்டினை கவர்னரே மறுத்துள்ளார். இதற்கேற்ப, செய்த தவறினை தூர்தர்ஷன் நிர்வாகம் ஒப்புக் கொண்டிருக்கிறது.

இதற்குப் பிறகும், கவர்னரை வசைபாடுவது, அரசியல் விளம்பரத்திற்காக தரம் தாழ்ந்த விமர்சனங்கள் மேற்கொள்ளப்படுகிறதோ என்ற எண்ணம் மக்கள் மத்தியில் எழுந்து விடும். தூர்தர்ஷன் நிர்வாகத்தில் ஏற்பட்ட கவனச் சிதறல் என்று தூர்தர்ஷன் நிர்வாகமே ஒப்புக் கொண்டிருப்பதையும், கவர்னரே தன் மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டினை மறுத்திருப்பதையும் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### சத்தீஷ்கரில் நக்சல் தாக்குதலில் பலியான

# வீரர்களின் உடல்களை தோளில் சுமந்து சென்று மரியாதை செலுத்திய அமைச்சர்

**ராய்ப்பூர், அக். 21-**

சத்தீஷ்கரில் நக்சல் தாக்குதலில் பலியான 2 வீரர்களின் உடல்களை தோளில் சுமந்து சென்று அம்மாநில அமைச்சர் இறுதி மரியாதை செலுத்தினார்.

சத்தீஷ்கரின் நாராயண்பூர் மாவட்டத்தில் இந்தோ -திபெத்திய எல்லை காவல் படையினர் மற்றும் நாராயண்பூர் மாவட்ட போலீசார் இணைந்து கூட்டாக நக்சலைட்டுகளை தேடும் பணியில் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.

அப்போது, பதுங்கி இருந்த நக்சலைட்டுகள் ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்த வீரர்களை தாக்கியதுடன், சக்தி வாய்ந்த வெடிகுண்டு ஒன்றை வெடிக்க செய்து பெரிய அளவில் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இந்த தாக்குதலில் இந்தோ- திபெத்திய எல்லை காவல் படையை சேர்ந்த 2 வீரர்கள் உயிரிழந்தனர். இது பற்றி பஸ்தார் பகுதிக்கான ஐ.ஜி. கூறும் போது, பலியானவர்கள் பவார் அமர் ஷாம் ராவ் மற்றும் கே. ராஜேஷ் என தெரிய வந்துள்ளது.

இவர்கள் தவிர போலீசாரில் 2 பேர் காயமடைந்தனர். சிகிச்சைக்கு பின்னர் அவர்கள் குணமடைந்து வருகின்றனர் என்றார். இந்நிலையில், உயிரிழந்த வீரர்கள் இரண்டு பேரின் உடல்களை அம்மாநில அமைச்சர் டேங் ராம் வெர்மா தோளில் சுமந்தபடி சென்று இறுதி மரியாதை செலுத்தினார்.

அதன் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறும் போது, சத்தீஷ்கரில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததில் இருந்து, நக்சலைட்டுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. சத்தீஷ்கரில் நக்சலைட்டுகளே இல்லாத நிலையை உருவாக்குவதற்கான பணியை மாநில அரசு மேற்கொண்டு வருகிறது என்றார்.

சத்தீஷ்காரின் தன்டேவாடா - நாராயண்பூர் எல்லை பகுதியருகே நெந்தூர் மற்றும் துல்துலி கிராமங்களில் வனப்பகுதிகளில் பாதுகாப்பு படையினர் நேற்று முன்தினம் நடத்திய என்கவுன்டரில் 38 பேர் உயிரிழந்தனர் என தன்டேவாடா போலீசார் வெளியிட்ட அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

# தமிழ்த்தாய் வாழ்த்து குறித்த சீமானின் பேச்சால் வேதனை

### அமைச்சர் அன்பில் மகேஷ் பேட்டி

**திருச்சி, அக். 21-**

தமிழ்த்தாய் வாழ்த்து குறித்த சீமானின் பேச்சு வேதனையாக உள்ளது என்று அமைச்சர் அன்பில் மகேஷ் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அமைச்சர் அன்பில் மகேஷ் கூறியதாவது, பள்ளி குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைவு தொடர்பான அறிக்கை குறித்து சுகாதாரத் துறையுடன் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டு மாணவர்களுக்கு ஊட்டச்சத்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளி குழந்தைகளையும் கண்டறிந்து அவர்களுக்கு கல்வி அளிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம். கல்வியும், சுகாதாரமும் 2 கண்கள் என முதல்-அமைச்சர் தெரிவிப்பது போல இரண்டையும் கவனமாக பார்த்து வருகிறோம்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தமிழ்த்தாய் வாழ்த்து நீக்கப்படும் என்று சீமான் பேசுவது வேதனைக்குரியதாக உள்ளது. தமிழ்நாடு அரசியல் என்று வரும் பொழுது கல்வியில் தான் தொடங்குகிறது. பாராட்டுவதாக இருந்தாலும் திட்டுவதாக இருந்தாலும் தமிழ் மொழியில் பேசும் அவர் இப்படி சொல்வது வேதனைக்குரியது.கல்விக்கு கூடுதலான நிதிதான் ஒதுக்கி வருகிறோம். ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பொழுது 32 ஆயிரம் கோடியில் ஆரம்பித்து தற்போது 42 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் அதன் வளர்ச்சி அதிகமாக தான் இருக்கிறது.இவ்வாறு அவர் கூறினார்.

### அதிக குழந்தைகளை பெற்றுக்கொள்ள

# இளம் தம்பதியருக்கு ஆந்திர முதல்வர் சந்திரபாபு அறிவுரை

**அமராவதி, அக். 21-**

தென்னிந்தியாவில் முதியோர் அதிகரித்துள்ளனர். இளம் தம்பதிகள் கூடுதலாக குழந்தைகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக, செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்த சந்திரபாபு நாயுடு கூறியதாவது,

தென் மாநிலங்களில் கருவுறுதல் விகிதம் குறைந்து வருகிறது. இரண்டு குழந்தைகளுக்கு மேல் உள்ளவர்கள் மட்டுமே உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட தகுதியுடையவர்கள் என்ற சட்டத்தை கொண்டு வர மாநில அரசு யோசித்து வருகிறது. அதிக குழந்தைகளை கொண்ட குடும்பங்களுக்கு அரசு கூடுதல் சலுகைகளை வழங்கக் கூடும்.

தென்னிந்தியாவில் முதியோர் அதிகரித்துள்ளனர். இளம் தம்பதிகள் கூடுதலாக குழந்தைகளை பெற்றுக் கொள்ள வேண்டும். முதியோர் அதிகரிப்பது தேசிய பிரச்னை. ஜப்பான், சீனா மற்றும் ஐரோப்பாவின் சில பகுதிகள் ஏற்கனவே முதியோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் பொருளாதார சுமையுடன் சிக்கித் தவிக்கின்றன. பிறப்பு விகிதம் தொடர்ந்து குறையும் பட்சத்தில் இந்தியாவையும் பாதிக்கும் சூழ்நிலை உள்ளது.

ஆந்திரா மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் உள்ள பல கிராமங்களில், வயதானவர்கள் மட்டுமே உள்ளனர். இளைய மக்கள் நகரங்களுக்குச் சென்று விட்டனர். இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொள்ள விரும்பும் தம்பதிகளுக்கு ஊக்கத்தொகைகள் வழங்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# வரும் சட்டசபை தேர்தலில் தேச பக்தராக வேலை செய்ய வேண்டும்

### கட்சியினருக்கு கெஜ்ரிவால் அறிவுறுத்தல்

**புதுடெல்லி, அக். 21-**

2025 சட்டசபை தேர்தலில் ஆம் ஆத்மி கட்சியினராக வேலை செய்யாதீர்கள். தேச பக்தராக பணியாற்றுங்கள் என்று கட்சியினருக்கு அரவிந்த் கெஜ்ரிவால் அறிவுறுத்தி உள்ளார்.

டெல்லி, பிடம்புராவில் கட்சித் தொண்டர்கள் மத்தியில், ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் கெஜ்ரிவால் பேசியதாவது:

ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் 11 பணியாளர்கள் கொண்ட குழுக்கள் இருப்பார்கள். மண்டல பொறுப்பாளர்கள் வாக்காளர்களை நேரில் சந்தித்து பேச வேண்டும். பகத் சிங் மற்றும் மகாத்மா காந்தி போன்றவர்கள் அரை நாள் வேலை செய்திருந்தால், இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்திருக்காது.

2025 தேர்தலில் ஆம் ஆத்மி கட்சியினராக வேலை செய்யாதீர்கள். தேச பக்தராக பணியாற்றுங்கள். உள்கட்சி சண்டை நடந்தால், வரவிருக்கும் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி தோல்விக்கு வழிவகுக்கும்.

ஆம் ஆத்மியின் திட்டங்களை நிறுத்த பா.ஜ.க. அதிகாரம் பெற விரும்புகிறது. இலவச மின்சாரம், பெண்களுக்கான பஸ் பயணம், கல்வி, மருத்துவம் உள்ளிட்ட ஆம் ஆத்மி அரசின் இலவசத் திட்டங்களைத் தடுக்க, பா.ஜ.க. சதி செய்து வருகிறது.

ஆம்ஆத்மி கட்சி வெற்றி பெறாவிட்டால் அரசு பள்ளிகளுக்கு என்ன நடக்கும் என்று நான் கவலைப்படுகிறேன். மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணம் உயரும். நான், சிறையில் இருந்த காலத்தில், சாலை சீரமைப்பு, முதியோர் ஓய்வூதியம், மருத்துவமனைகளில் இலவச மருந்துகள், விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கும் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை பா.ஜ.க. நிறுத்த முயற்சி செய்தது.

இப்போது மக்கள் இலவச மின்சாரம், பள்ளிகள் மற்றும் மருத்துவமனை வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். அவர்கள் 22 மாநிலங்களில் ஆட்சியில் உள்ளனர். எனவே ஆம் ஆத்மி அரசாங்கம் வழங்கும் திட்டங்களை முடக்குவதற்கு அவர்கள் டெல்லியில் ஆட்சிக்கு வர விரும்புகிறார்கள். இவ்வாறு அவர் பேசினார்.

# தமிழ்நாட்டில் ஆன்மிகமும், அரசியலும் நிச்சயம் கலக்கும்

### தமிழிசை சவுந்தரராஜன் உறுதி

**சென்னை, அக். 21-**

தமிழகத்தில் ஆன்மிகமும், அரசியலும் நிச்சயம் கலக்கும் என்று தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்தார். சென்னை ஆலந்தூரில் புதுச்சேரி முன்னாள் கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் நேற்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது,

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தனது டுவிட்டர் பக்கத்தில் ஒரு பதிவை வெளியிட்டுள்ளார். அதில், அவர் திருவண்ணாமலையில் கிரிவலம் போகவில்லை. சரிவலம் போனோம் என்று சொல்லியிருக்கிறார்.

எதுவாக இருந்தாலும் சரி, இடம் போய்க் கொண்டிருந்தவகள் இன்று வலம் போய்க் கொண்டிருக்கிறார்கள். அதுவே ஆன்மிகத்தின் மிகப்பெரிய வெற்றிதான். அதே போல் என்னைப்பற்றி சொல்லும்போது, இவர்கள் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் என்று சொல்கிறார்.

நான் என் அப்பா தோளிலோ, தாத்தா தோளிலோ ஏறி வரவில்லை. நானாக தட்டுத் தடுமாறி, தடம் மாறாமல் மக்களை சந்தித்து வருகிறேன். என்றைக்காவது ஒருநாள் எங்களுக்கு வெற்றி கிடைக்கும்.

தமிழகத்தில் ஆன்மிகமும், அரசியலும் கலக்கவே கலக்காது என்று சொல்கிறார். நான் இன்று சவால் விடுகிறேன். தமிழகத்தில் ஆன்மிகமும், அரசியலும் நிச்சயம் கலக்கும். அண்ணா வளர்த்தது தமிழ் அல்ல, ஆண்டாள் வளர்த்தது தமிழ். பெரியார் வளர்த்தது தமிழ் அல்ல, பெரியாழ்வார் வளர்த்தது தமிழ். இவர்கள் இருவரும் பேசிய சமூக நீதியை அண்ணாவும், பெரியாரும் பேசவில்லை.

எல்லோருக்கும் எல்லாம் என்பதுதான் எங்கள் கொள்கை என்று கூறுகிறார். அது உண்மையென்றால், உதயநிதி ஸ்டாலின் இந்த வயதில் எப்படி துணை முதல்வர் ஆனார்? எல்லோருக்கும் எல்லாம் என்றால் எல்லோரையும் நீங்கள் பரிசீலனை செய்திருக்க வேண்டுமே?. இவ்வாறு தெரிவித்தார்.

# வயநாடு தொகுதியில் காங்கிரஸ் கடும் போட்டியை சந்திக்கும்

### பா.ஜ.க. வேட்பாளர் நவ்யா உறுதி

**கோழிக்கோடு, அக். 21-**

வயநாடு லோக்சபா தொகுதியில் நடக்கவுள்ள இடைத்தேர்தலில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் பிரியங்கா காந்தி கடும் போட்டியை எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என பா.ஜ.க. வேட்பாளர் நவ்யா ஹரிதாஸ் நேற்று தெரிவித்தார்.

2024 பார்லிமெண்ட் தேர்தலில் வயநாடு, ரேபரேலி இரண்டு தொகுதியில் போட்டியிட்டு வென்ற ராகுல் காந்தி, வயநாடு தொகுதி எம்.பி., பதவியை ராஜினாமா செய்தார். அந்த தொகுதிக்கு நவம்பர் 13-ம் தேதி இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

அதில், காங்கிரஸ் சார்பில் பிரியங்கா காந்தி போட்டியிடுகிறார். இவரை எதிர்த்து பா.ஜ.க. சார்பில் நவ்யா ஹரிதாஸ் போட்டியிடுவார் என அக்கட்சி அறிவித்துள்ளது. இந்த நிலையில் நேற்று பா.ஜ.க. வேட்பாளர் நவ்யா ஹரிதாஸ் கூறியதாவது:



ராகுல், ரேபரேலியில் வெற்றி கிடைத்தவுடன் வயநாடு தொகுதி உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து விட்டார். வயநாடு தொகுதியை கை விட்டுவிட்டார். அங்கு சில மாதங்களுக்கு முன் கடும் நிலச்சரிவு ஏற்பட்டபோது, தொகுதி உறுப்பினராக இருந்த ராகுல், பார்லிமென்டில் மக்கள் பிரச்னை குறித்து பேசவில்லை.

ஆகவே, மக்கள் கடும் எதிர்ப்பில் உள்ளனர். இந்நிலையில், எதிர்தரப்பில் போட்டியிடும் காங்கிரசும் அதன் வேட்பாளராகிய பிரியங்காவும் கடும் போட்டியை சந்தித்து ஆக வேண்டும். பிரியங்கா வெற்றி பெற்றால் இதே போன்ற நிலை தான் ஏற்படும்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக, வயநாடு மக்களை, எம்.பி., யாக இருந்த ராகுல், அரிதாகவே சந்தித்துள்ளார். மக்களின் பிரச்னைகளை கேட்கவில்லை. நான் கோழிக்கோடு மாநகராட்சியின் உறுப்பினராக இரண்டு முறை இருந்துள்ளேன். இது எனக்கு முதல் லோக்சபா தேர்தல். நான் வெற்றி பெற்றால் மக்கள் பணியை சிறப்பாக செய்வேன். இவ்வாறு நவ்யா ஹரிதாஸ் கூறினார்.

### அயோத்தியில் தீப திருவிழா:

# சரயு நதிக்கரையில் 25 லட்சம் விளக்குகள் ஏற்ற திட்டம்

**லக்னோ,அக். 21-**

அயோத்தியில் தீபத் திருவிழாவிற்காக சரயு நதிக்கரையில் 25 லட்சம் விளக்குகள் ஏற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

உத்தர பிரதேச மாநில முதல்வராக யோகி ஆதித்யநாத் கடந்த 2017-ம் ஆண்டு பதவியேற்றவுடன், தீபாவளி பண்டிகைக்கு முதல் நாள், தீபோத்ஸவ் எனப்படும் தீபத் திருவிழாவை அறிவித்தார்.

அந்த ஆண்டு, அயோத்தி நகரின் சரயு நதிக்கரையில் 51 ஆயிரம் அகல் விளக்குகள் ஏற்றப்பட்டன. தொடர்ந்து 2019-ம் ஆண்டு 4.10 லட்சம் விளக்குகள், 2020-ம் ஆண்டு 9 லட்சத்துக்கும் அதிகமான விளக்குகள் ஏற்றப்பட்டன.

கடந்த 2022-ம் ஆண்டு அயோத்தியில் 15 லட்சத்திற்கும் அதிகமான அகல் விளக்குகள் ஏற்றப்பட்டு கின்னஸ் சாதனை படைக்கப்பட்ட நிலையில், 2023-ம் ஆண்டு 22.3 லட்சம் விளக்குகள் ஏற்றப்பட்டு அந்த சாதனை முறியடிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த ஆண்டு தீபத் திருவிழாவிற்கு அயோத்தியில் 25 லட்சம் விளக்குகள் ஏற்ற திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன்படி சரயு நதிக்கரையில் உள்ள 55 படித்துறைகளிலும் விளக்குகள் ஏற்றப்பட உள்ளது.

இந்த தீபத் திருவிழாவில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்க உள்ளதாகவும், திருவிழாவிற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாகவும் மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியை திணிக்க யாரும் முயற்சி செய்யவில்லை

### மத்திய அமைச்சர் எல்.முருகன் உறுதி

**சென்னை, அக். 21-**

இந்தி மொழியை திணிக்க யாரும் முயற்சிக்கவில்லை. மக்கள் தங்களுக்கு விருப்பமான மொழிகளை கற்றுக் கொள்ளலாம் என்று மத்திய அமைச்சர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில், பா.ஜ.க.வை தமிழர்களுக்கு எதிரான கட்சி என்பதுபோல் சித்தரிக்க தி.மு.க. முயல்கிறது. ஆனால் அது நிச்சயம் நடக்காது. தமிழகத்தில் பா.ஜ.க. நன்றாக வளர்ந்துள்ளது.

இந்தி மொழியை திணிக்க யாரும் முயற்சிக்கவில்லை. மக்கள் தங்களுக்கு விருப்பமான மொழிகளை கற்றுக் கொள்ளலாம். கவர்னர் பங்கேற்ற நிகழ்ச்சியில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடிய போது சிறிய தவறு நேர்ந்துள்ளது.

தவறுகள் நடப்பது சகஜம்தான். ஆனால் அந்த தவறுக்கு நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கவர்னர் எப்படி பொறுப்பாக முடியும்?. இவ்வாறு எல்.முருகன் தெரிவித்தார்

# திருச்சானூரில் நவம்பர் 28-ல் பிரம்மோற்சவம் ஆரம்பம்

### தேவஸ்தானம் சார்பில் ஏற்பாடுகள் தீவிரம்

**திருப்பதி, அக். 21-**

திருச்சானூர் பத்மாவதி தாயார் கோவிலில் வருடாந்திர பிரம்மோற்சவம் நவம்பர் 28-ம் தேதி தொடங்க உள்ளது.

விழாவிற்கு தேவையான முன்னேற்பாடுகளை செய்வதற்காக திருமலை திருப்பதி தேவஸ்தான இணை செயல் அலுவலர் வீரபிரம்மம் திருச்சானூர் சென்றார். அப்போது திருமலை பிரம்மோற்சவத்துக்கு இணையாக திருச்சானூரிலும் பிரம்மோற்சவத்தை பிரமாண்டமாக நடத்துவதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்ளும்படி தேவஸ்தானத்தின் அனைத்துத் துறை அதிகாரிகளுக்கும் இணை செயல் அலுவலர் வீரபிரம்மம் உத்தரவிட்டார்.

மேலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பத்மாவதி தாயார் கோவில், புஷ்கரணி (தெப்பக்குளம்), மாட வீதிகள், நவஜீவன் கண் மருத்துவமனை அருகில் உள்ள காலி நிலங்கள், கந்தசாலை வட்டம், உயர்நிலைப்பள்ளி சுற்றுப்புறம், பசுபு மண்டபம், புடி சாலை மற்றும் பிற பகுதிகளை பார்வையிட்டார்.

இது பற்றி இணை செயல் அலுவலர் வீரபிரம்மம் கூறுகையில், அடுத்த மாதம் 28-ம் தேதி தொடங்கி டிசம்பர் 6-ம் தேதி வரை திருச்சானூர் பிரம்மோற்சவ விழா நடைபெற உள்ளது. திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் அனைத்து துறைகளும் பஞ்சாயத்து மற்றும் காவல் துறையுடன் ஒருங்கிணைந்து பக்தர்கள் சிரமம் இல்லாமல் தரிசனம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பிரம்மோற்சவத்திற்கு வரும் பக்தர்கள், எங்கள் குழுவினரின் ஒருங்கிணைந்த பணியால் திருப்திகரமாக மூலஸ்தான தாயாரையும் வாகன சேவைகளையும் தரிசனம் செய்யலாம்.

பிரம்மோற்சவத்தின் கடைசி நாளான பஞ்சமி தீர்த்த நாளில், புடி ரோடு, ரேணிகுண்டா, மார்க்கெட் யார்டு பகுதிகளில் வாகனங்கள் நிறுத்த இடம் ஒதுக்கப்படும். அதே போல், நவஜீவன் கண் மருத்துவமனை, மேல் நிலைப்பள்ளி, கோசாலை வளாகம் (புடி ரோடு) ஆகிய இடங்களில் பக்தர்கள் ஓய்வெடுக்க ஜெர்மன் கூடாரங்கள் அமைக்கப்பட உள்ளன.

புஷ்கரணிக்கு செல்வதற்கும், வெளியே வருவதற்கும் உரிய வாயில்களை ஏற்பாடு செய்யவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமிழக பக்தர்கள் அதிகளவில் வருவதால், தமிழில் வழிகாட்டி பெயர் பலகைகள் தயார் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# டெல்லியில் பள்ளி அருகே பயங்கர சத்தத்துடன் வெடித்த மர்ம பொருள்

**புதுடெல்லி, அக். 21-**

டெல்லி ரோகினி பகுதியில் சி.ஆர்.பி.எப். பள்ளிக்கு அருகே மர்மமான முறையில் நிகழ்ந்த வெடிப்புச் சம்பவத்தை அடுத்து, தீ அணைப்புத்துறை, வெடிகுண்டு நிபுணர்கள், காவல் துறை ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரித்து வருகின்றனர்.

நேற்று காலை நிகழ்ந்த இந்த சம்பவத்தில், அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த வெடிப்புச் சம்பவத்தால் பள்ளியின் சுவர், அருகில் உள்ள கடை மற்றும் கார் சேதமடைந்தது.

இந்தச் சம்பவத்தை அடுத்து, தீயணைப்பு வண்டிகள், வெடிகுண்டு நிபுணர்கள், காவல்துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். இதுகுறித்து டி.எப்.எஸ் அதிகாரிகள் கூறுகையில்,

இன்று (நேற்று) காலை 7.50 மணிக்கு சி.ஆர்.பி.எப் பள்ளி சுற்றுச்சுவர் அருகே வெடிகுண்டு வெடித்ததாக எங்களுக்கு தகவல் வந்தது. உடனடியாக நாங்கள் இரண்டு தீயணைப்பு வாகனங்களுடன் அங்கே விரைந்து சென்றோம். அங்கு பெரும் தீ பரவலோ, யாரும் காயப்படவோ இல்லை. அதனால் நாங்கள் வாகனங்களுடன் திரும்பி விட்டோம் என்றார்.

முதல்கட்ட ஆய்வில், வெடிப்புச் சம்பவத்துக்கு காரணமான பொருள் பெட்ரோல் குண்டாக இருக்கலாம் என்று தெரிய வந்துள்ளது. முதல்கட்ட விசாரணையில் எந்த தீவிரவாத கோணமும் இந்த வெடிப்புச் சம்பவத்தின் பின்னணியில் கண்டறியப்படவில்லை. என்றாலும் எப்.எல்.எஸ். குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் அனைத்தும் தெளிவாகும்.

இந்தச் சம்பவம் குறித்து, பட்டாசு வெடிப்பு போன்ற அனைத்து கோணங்களிலும் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். காவல்துறையின் தடையவியல் குழுவினர், குற்றப் பிரிவினர் வெடிப்புச் சம்பவம் நடந்த இடத்தில் இருந்து மாதிரிகளை சேகரித்தனர். அங்குள்ள கண்காணிப்பு கேமிரா காட்சிகளையும் ஆய்வு செய்கின்றனர்.


இந்த வெடிப்புச் சம்பவம் அந்தப் பகுதியில் பாதுகாப்பு குறித்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

**மரம் மனிதனின் உரம்**

# ராஜஸ்தானில் நிகழ்ந்த விபத்தில் 8 குழந்தைகள் உட்பட 12 பேர் பலி

**ஜெய்ப்பூர், அக். 21-**

ராஜஸ்தான் மாநிலம் தோல்பூரில் பஸ்சும், டெம்போவும் மோதிக் கொண்ட விபத்தில் 8 குழந்தைகள் உட்பட 12 பேர் உயிரிழந்தனர்.



குவாலியரில் இருந்து ஜெய்ப்பூர் நோக்கி ஸ்லீப்பர் கோச் பஸ் ஒன்று வேகமாக சென்று கொண்டு இருந்தது. சுமிபூர் அருகே சென்ற போது, டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த பஸ், டெம்போ மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் இர்பான் என்கிற பூந்தி, அவரது மனைவி ஜூலி மற்றும் 8 குழந்தைகள் உட்பட 12 பேர் உயிரிழந்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார் காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர்.

உயிரிழந்தவர்களின் உடல்களை பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பஸ் டிரைவர் அதிக வேகமாக வந்ததே விபத்துக்கு காரணம் என்று போலீசாரின் முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவிலில் திருட்டு: 4 பேர் கைது

**திருவனந்தபுரம்,அக். 21-**

திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவிலில் நடந்த திருட்டு சம்பவம் தொடர்பாக ஆஸ்திரேலிய டாக்டர் உட்பட 4 பேரை கைது செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் உலகப் புகழ் பெற்ற பத்மநாபசுவாமி கோவில் உள்ளது. இந்த கோவிலுக்கு தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து தரிசனம் செய்து வருகின்றனர். இதனிடையே, பத்மநாபசுவாமி கோவிலில் கடந்த வியாழக்கிழமை திருட்டு சம்பவம் அரங்கேறி உள்ளது.

கோவிலில் பூஜைக்கு பயன்படுத்தப்படும் வெண்கலத்தால் ஆன தட்டு திருடப்பட்டுள்ளது. இது தொடர்பாக சி.சி.டி.வி. கேமராக்களை ஆய்வு செய்த போலீசார் விசாரணையை தீவிரப்படுத்தினர். அதில், திருட்டில் ஈடுபட்டது அரியானாவை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்து.

இதையடுத்து, அரியானா விரைந்த கேரள போலீசார் அம்மாநில போலீசார் உதவியுடன் கோவிலில் திருட்டில் ஈடுபட்ட 3 பெண்கள் உள்பட 4 பேரை கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் ஆஸ்திரேலிய குடியுரிமை பெற்றவர் என்பதும் அவர் டாக்டராக பணியாற்றி வருகிறார் என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து கோவிலில் திருடப்பட்ட வெண்கல பூஜை தட்டை கைப்பற்றினர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



இடைநிலை, பட்டதாரி ஆசிரியர்கள் நியமன பணிகளை மாதக்கணக்கில் நிறுத்தி வைத்திருப்பது தான் கல்வி வளர்ச்சியில் காட்டும் அக்கறையா? தமிழகத்தில் அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு தரமான கல்வி கிடைக்க ஆசிரியர்களை நியமிக்கும் பணிகளை அரசு விரைவுபடுத்த வேண்டும்.

- அன்புமணி



தமிழ்த் தேசியம் என்றால் என்ன என்று சொல்வதற்கு நாங்கள் தயார். அதேபோல், திராவிடம் என்றால் என்னவென்று சொல்ல யாரேனும் தயாராக உள்ளனரா..? கீழடியில் கண்டுபிடிக்கப்பட்ட நாகரிகம் தமிழர் நாகரிகம் என்று தான் சொல்லப்படுகிறது. ஆனால், ஆட்சியில் உள்ளவர்கள் திராவிட நாகரிகம் என்று சொல்கிறார்கள்.

- சீமான்



அரசுப் பணியாளர்களை ஒடுக்குவது, தொழிலாளர்களுக்கு 12 மணி நேர வேலை நிர்ணயம் செய்வது என தொழிலாளர் விரோத செயல்களில் ஈடுபட்டு வரும் தி.மு.க. அரசு, இனியாவது அதன் அநீதிகளைத் திருத்திக் கொள்ள வேண்டும். 20 ஆண்டுகளை நிறைவு செய்த தற்காலிக தொழிலாளர்கள் அனைவருக்கும் உடனடியாக பணி நிலைப்பு வழங்க வேண்டும்.

- ராமதாஸ்



மராட்டிய மாநிலத்தில் மக்களவை தேர்தலில் ஏற்பட்ட தோல்வியால் பா.ஜ.க. விரக்தியடைந்துள்ளது. இந்தியாவை உலகின் மிகப்பெரிய பொருளாதாரமாக மாற்றுவோம் என பா.ஜ.க. கூறியது. ஆனால் நமது அண்டை நாடுகள் நம்மை விட நன்றாக செயல்படுகின்றன. அண்டை நாடுகளை விட இந்தியாவில் பட்டினி கொடுமை அதிகமாக உள்ளது.

- அகிலேஷ் யாதவ்

தூத்துக்குடி மாவட்டத்தில்

## ஜிபிஎஸ் பொருத்தப்பட்ட காவல்துறை வாகனங்கள் :டிஐஜி மூர்த்தி துவக்கி வைத்தார்



**தூத்துக்குடி.அக்.21.**

தூத்துக்குடி மாவட்டத்தில் ஜிபிஎஸ் பொருத்தப்பட்ட காவல்துறை வாகனங்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான் முன்னிலையில் திருநெல்வேலி சரக காவல்துறை துணை தலைவர் பா. மூர்த்தி கொடியசைத்து துவக்கி வைத்தார்.

தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான் உத்தரவின் படி தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள காவல்துறை வாகனங்களில் முதற்கட்டமாக 7 நான்கு சக்கர நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் மற்றும் 11 இருசக்கர ரோந்து வாகனங்களில் GPS கருவி பொருத்தப்பட்டும், மேலும் குற்ற நிகழ்வுகளை கண்காணிக்கும் 360 டிகிரி சிசிடிவி கேமரா பொருத்தப்பட்ட Eagle Beat காவல் வாகனமும் பொதுமக்கள் பாதுகாப்புக்காக ரோந்து பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளது.

அதன்படி ஜிபிஎஸ் கருவி பொருத்தப்பட்ட காவல் வாகனங்கள் நேரடியாக மாவட்ட காவல் அலுவலகம் மூலம் கண்காணிக்கப்பட்டு வாகனத்தின் தற்போதைய ரோந்து மேற்கொள்ளும் இடம் நேரடியாக கண்காணிக்கப்பட்டும், மேலும் பொதுமக்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் ஏதேனும் பிரச்சனைகள் அல்லது குற்ற நிகழ்வுகள் நடைபெற்றால் அருகில் உள்ள GPS பொருத்தப்பட்ட காவல் வாகனம் துரிதமாக சம்பவ இடத்திற்கு சென்று நடவடிக்கை எடுக்கவும் மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தற்போது தீபாவளி போன்ற பண்டிகை காலங்கள் வரவுள்ள நிலையில் தூத்துக்குடியில் உள்ள முக்கிய பகுதிகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள் ஆகியவற்றில் திருட்டு போன்ற குற்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கவும் பொதுமக்களின் பாதுகாப்பை மேம்படுத்தவும், மேற்படி 360 டிகிரி சிசிடிவி கேமரா பொருத்தப்பட்ட Eagle Beat காவல் வாகனத்தில் ரோந்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்படி GPS பொருத்தப்பட்ட காவல்துறை வாகனங்கள் மற்றும் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்ட காவல் வாகனங்களை இன்று (19.10.2024) தூத்துக்குடி மத்தியபாகம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட குரூஸ் பர்னாந்து சிலை சந்திப்பு பகுதியில் வைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான் முன்னிலையில் திருநெல்வேலி சரக காவல்துறை துணைத் தலைவர் பா. மூர்த்தி கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி நகர உட்கோட்ட காவல் உதவி கண்காணிப்பாளர் மதன், காவல் ஆய்வாளர்கள் உட்பட காவல்துறையினர் உடனிருந்தனர்.

## எத்தனை நடிகர்கள் கட்சி ஆரம்பித்தாலும் அரசியலில் வெற்றி பெற முடியாது: அதிமுக செயல் வீரர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் சண்முகநாதன் பேச்சு



திருச்செந்தூர், அக். 21:

எத்தனை நடிகர்கள் கட்சி ஆரம்பித்தாலும் அரசியலில் வெற்றி பெற முடியாது என திருச்செந்தூரில் நடந்த அதிமுக செயல் வீரர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் சண்முகநாதன் பேசினார்.

திருச்செந்தூர் ஒன்றிய, நகர மற்றும் ஆறுமுகநேரி, கானம் நகர செயல் வீரர்கள் ஆலோசனை கூட்டம் ராஜ் மஹாலில் வைத்து நடந்தது. கூட்டத்துக்கு ஒன்றிய செயலாளர் பூந்தோட்டம் மனோகரன் தலைமை வகித்தார். ஜெ., பேரவை மாவட்ட செயலாளர் விஜயகுமார், மாவட்ட தலைவர் கோட்டை மணிகண்டன், மாவட்ட இணை செயலாளர்கள் சுரேஷ்பாபு, பழக்கடை திருப்பதி, மாவட்ட துணைச் செயலாளர் ஆர்எம்கேஎஸ் சுந்தர், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ராஜேஸ்வரி, எம்ஜிஆர் மன்ற மாவட்ட இணை செயலாளர் மகாலிங்கம், மாவட்டத் துணைச் செயலாளர் ராஜாநேரு, கானம் நகர செயலாளர் செயலாளர் வீரவெற்றிவேல் ஆகியோர் முன்னிலை வைத்தனர். திருச்செந்தூர் நகர செயலாளர் மகேந்திரன் வரவேற்றார்.கூட்டத்தில் அதிமுக அமைப்பு செயலாளர் சுதா பரமசிவன் சிறப்புரையாற்றினார்.கூட்டத்தில் தெற்கு மாவட்ட செயலாளர் சண்முகநாதன் பேசியதாவது:

2026 சட்டசபை தேர்தலில் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பதற்கான ஆலோசனை கூட்டம் தான் இப்போது நடக்கிறது. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் மோடி, ராகுல் யார் பிரதமராக வரவேண்டும் என்பதற்காக மக்கள் வாக்காளித்தனர். அத்தேர்தலில் மோடி வரக்கூடாது என்பதற்காக திமுக கூட்டணிக்கு மக்கள் வாக்களித்தனர். சட்டசபை தேர்தல் என்பது வேறு. புரட்சித்தலைவர் எம்ஜிஆர் தோற்றுவித்த கட்சி. கட்சி துவங்கிய 6 மாதத்தில் திண்டுக்கல் இடைத்தேர்தலில் வெற்றி பெற்றது. அதன்பிறகு நடந்த தேர்தலில் அதிமுக வெற்றி பெற்று ஆட்சியை பிடித்தது. எம்ஜிஆர் மறைவிற்கு பிறகு ஜெயலலிதா வழிநடத்தினார். அவரது மறைவிற்கு பிறகு கட்சி சோதனையான காலத்தில் ஒற்றை தலைமையின் கீழ் வரவேண்டும் என்பதற்காக சுப்ரீம் கோர்ட் வரை சென்று கட்சி நிர்வாகத்தை கைப்பற்றி பொதுசெயலாளராக தேர்வு செய்யப்பட்ட எடப்பாடி பழனிச்சாமி தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. எத்தனையோ நடிகர்கள் கட்சி ஆரம்பித்து காணாமல் போய் விட்டனர். சிவாஜி, பாக்கியராஜ், விஜயகாந்த், கமல் உள்ளிட்ட பலர் கட்சி துவங்கினாலும் வெற்றி பெற முடியவில்லை. நடிகராக கட்சி துவங்கிய எம்ஜிஆர் மட்டுமே ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினார். தற்போது சிலர் கட்சி துவங்கியுள்ளனர். அவர்களால் அரசியலில் வெற்றி பெற முடியாது. 2026 தேர்தலில் ஆட்சி மாற்றம் நிச்சயம் நடக்கும். அத்தேர்தலில் அதிமுகவினர் உண்மையாக உழைக்க வேண்டும். பூத் கமிட்டியில் இளைஞர்கள், இளம்பெண்கள் இடம் பெற வேண்டும். தற்போது அதிமுகவில் 2 கோடியே 30 லட்சம் உறுப்பினர்களாக உள்ளனர். திமுக குடும்பத்திற்காக உழைக்கும் கட்சி. மக்களுக்காக எதையும் செய்யவில்லை. அதிமுகவில் யார் வேண்டுமானாலும் பதவிக்கு வரமுடியும். திமுகவில் அப்படி இல்லை. கருணாநிதிக்கு பிறகு முதல்வர் ஸ்டாலின், அவரது மகன் உதயநிதி துணை முதல்வர் என அதிகாரத்தில் இருப்பார்கள். திமுக ஆட்சியில் மக்களுக்கு எந்த திட்டமும் நிறைவேற்றப்படவில்லை. அதிமுக ஆட்சியில் 6 லட்சம் கோடி தான் கடன் இருந்தது. ஆனால் 3 ஆண்டு திமுக ஆட்சியில் 9.5 லட்சம் கோடியாக கடன் உயர்ந்துவிட்டது. எடப்பாடி ஆட்சியில் வரி உயர்ந்தாமல் ஆட்சி நடத்தினார். தற்போது மின்சாரம் கட்டணம் 3 முறை உயர்த்தப்பட்டுள்ளது. வீட்டு வரி, சொத்து வரி பல மடங்கு உயர்த்துவிட்டது. ரேஷன் கார்டு உள்ள அனைவருக்கும் ரூ.1000 வழங்கப்படும் என முதல்வர் ஸ்டாலின் கூறினார். ஆனால் தகுதியான நபர்களுக்கு தான் ரூ.1000 வழங்கப்படும் என்றார்கள். தமிழகத்தில் 2.25 கோடி ரேஷன் கார்டுகள் உள்ளன. இதில் 1.10 கோடி ரேஷன் கார்டுதாரர்களுக்கு மட்டும் தான் ரூ.1000 வழங்கியுள்ளனர். மீதமுளள 1.15 கோடி ரேஷன் கார்டுதாரர்களுக்கு ரூ.1000 வழங்கப்படவில்லை.எனவே 2026 தேர்தலில் ஆட்சி மாற்றம் கட்டாயம் வரும். எடப்பாடி தலைமையில் அதிமுக வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றும். அதற்காக அதிமுகவினர் உழைக்க வேண்டும். என்று பேசினார்.

கூட்டத்தில் ஒன்றிய அவைத்தலைவர் லிங்ககுமார், ஒன்றிய இளைஞர் பாசறை செயலாளர் வினோத், நகர பொருளாளர் வள்ளிராஜ், நகராட்சி கவுன்சிலர் வேலம்மாள், காயல் பட்டினம் நகர செயலாளர் காயல் மௌலானா, மாவட்ட விவசாய அணி தலைவர் தேவராஜ், நகர துணை செயலாளர் செல்வ சண்முகசுந்தர், நகர அவை தலைவர் காளிமுத்து, மாவட்ட துணை செயலாளர் சுரேஷ், சுயம்பு, அரசகுரு, கண்ணன், அர்ஜுனன், ஜெ., பேரவை நகர செயலாளர் லட்சுமணன், மகளிரணி சிரிலா, சுகிர்தா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## நாசரேத்தில் மர்காஷிஸ் நினைவிடத்தில் கிறிஸ்தவ வரலாற்று சங்கத்தினர் மரியாதை

நாசரேத்.அக்.21

நாசரேத் தூய யோவான் பேராலய வளாகத்தில் உள்ள மர்காஷிஸ் மிஷனெரி நினைவிடத்தில் தென்காசி பங்களா சுரண்டையைச் சார்ந்த கிறிஸ்தவ வரலாற்று சங்கத்தினர் மரியாதை செலுத்தினர்.

கிறிஸ்தவ வரலாற்று சங்கத்தின் நிறுவன தலைவர் மன்னா செல்வகுமார் தலைமையில் விருதுநகர், சிவகாசி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சார்ந்த பல்வேறு வரலாற்று ஆர்வலர்கள் திருநெல்வேலி கதீட்ரல் பேராலயம் மற்றும் பல்வேறு மிஷனெரி பணித்தளங்களை பார்வையிட்ட பின்னர் நாசரேத் தூய யோவான் பேராலயத்திற்கு வருகை தந்தனர். மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளியின் இயற்பியல் ஆசிரியர் ஜெர்சோம் ஜெபராஜ் அனைவரையும் வரவேற்றார். அதன் பின்னர், நாசரேத் தூய யோவான் பேராலயத்தின் வரலாறு மற்றும் அதன் சிறப்புகள் குறித்தும், மர்காஷிஸ் மிஷனெரி பணிகள் குறித்தும், மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளியின் வரலாறு குறித்தும் அனைவருக்கும் எடுத்துரைத்தார்.

வருகை தந்த அனைவரும் தூய யோவான் பேராலயத்தில் வழிபட்ட பின்னர், மர்காஷிஸ் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில், கிறிஸ்தவ வரலாற்று சங்கத்தை சார்ந்த பொன்ராஜ், பிரின்ஸ் மற்றும் விருதுநகர் எவாஞ்சலிக்கல் யூனியன் தென் மண்டல தலைவர் சாலமன் பீட்டர் மற்றும் நிர்வாகிகள் பரமாத்மா, ஜான் வில்சன் மற்றும் மதியழகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

போக்குவரத்து விதிகளை மதிக்கவும்

## அதிமுக உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கும் பணி ஆய்வு: மாவட்ட செயலாளர் செல்வமோகன்தாஸ்பாண்டியன் தலைமையில் நடந்தது



தென்காசி அக்.21:

அதிமுக பொதுச்செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிச்சாமி ஆணைக்கிணங்க தென்காசி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், செல்வமோகன்தாஸ்பாண்டியன் தலைமையில் கழக அமைப்புச் செயலாளர், முன்னாள் அமைச்சர், அன்வர்ராஜா, மாவட்ட கழக அவைத் தலைவர், சண்முகசுந்தரம், தென்காசி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் சங்கர பாண்டியன், குற்றாலம் பேரூர் கழகச் செயலாளர் கணேஷ்தாமோதரன் ஆகியோர் முன்னிலையில் குற்றாலம் பேரூராட்சி பகுதிகள், தென்காசி கிழக்கு ஒன்றியம், காசிமேஜர்புரம், அய்யாபுரம், அழகப்பபுரம், மற்றும் குத்துக்கல்வலசை ஆகிய பகுதிகளில் உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கும் பணி ஆய்வு நடைபெற்றது. இதில் கீழப்பாவூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் இருளப்பன் , மாவட்ட இலக்கிய அணி செயலாளர் நெல்லை முகிலன், செங்கோட்டை ஞானராஜ் , குற்றாலம் சங்கர ராமன், கருப்பசாமி பாண்டியன் , தங்கபாண்டியன், அமல்ராஜ், காசிமேஜர்புரம் நிர்வாகிகள் ஐயப்பன், ரவிக்குமார், சொர்ணம் (எ) ரவி, சிடாமணி, சுடலை, மாரியப்பன், சபரி கணேசன், வண்டு முருகன், மற்றும் நல்ல கண்ணு, சுப்பிரமணியன், முப்புடாதி, செல்வகுமார், சக்தி, அமல்ராஜ், சரவணன், பிச்சைமணி, உட்பட கிளைக் கழக செயலாளர்கள், வார்டு கழக செயலாளர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



**தென்காசி தெற்கு மாவட்ட திமுக அலுவலமான கலைஞர் அறிவாலயத்திற்கு வருகை தந்த நகர்ப்புறம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேருவிற்கு தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் சிறப்பான வரவேற்பு அளித்தார்.**

## மொரப்பூர் கிழக்கு ஒன்றிய அதிமுக செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டம்



**மொரப்பூர்,அக்.21-**

தருமபுரி மாவட்டம் மொரப்பூர் கிழக்கு ஒன்றிய அதிமுக செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டம் மொரப்பூரில் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு ஒன்றிய அவைத்தலைவர் அன்சர் தலைமை வகித்தார்.ஒன்றிய கழக செயலாளர் செல்வம் வரவேற்று பேசினார்.

முன்னாள் அமைச்சரும், தருமபுரமாவட்ட கழக அதிமுக செயலாளரும, பாலக்கோடு எம்.எல்.ஏ.வுமான கே.பி.அன்பழகன்

மாநில விவசாய அணி துணை செயலாளர் டி.ஆர். அன்பழகன் ஆகியோர் கலந்து கொண்டு கட்சியின் வளர்ச்சி பணிகள் குறித்தும்,வருகின்ற உள்ளாட்சி தேர்தல்,கூட்டுறவு தேர்தல் மற்றும் சட்டமன்ற தேர்தலில் எவ்வாறு பணியாற்றி வெற்றி பெறுவது குறித்து நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.இந்நிகழ்ச்சியில் வே.சம்பத்குமார் எம்.எல்.ஏ.மாவட்ட ஊராட்சி குழு தலைவர் எம்.யசோதா மதி வா ணன், மா வட்ட பொருளாளர் நல்லதம்பி, டாக்டர்.அசோகன், மாவட்ட கூட்டுறவு ஒன்றிய முன்னாள் சங்க தலைவர் பொன்னுவேல் ஒன்றிய செயலாளர்கள் ஜி.மதிவாணன்,எம்.கே.மகாலிங்கம், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினரும்,நகர செயலாளருமான கே.கே.தனபால் முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ஐ.கே. முருகன், ஒன்றிய விவசாய அணி நடராஜ், கம்பை நல்லூர் பேரூராட்சி கவுன்சிலர் சரவணன், தகவல் தொழில் நுட்ப பிரிவு நிர்வாகிகள் நேதாஜி, அறிவானந்தம,சுகதேவ்,ஊராட்சி மன்ற தலைவர் கவிதா செந்தில்குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கவிதாபோஸ், முனிராஜ், டாஸ்மாக் தொழிற்சங்க நிர்வாகி நாகராஜ், சிறுபின்மை பிரிவு அமானுல்லா,சிவலிங்கம்,நவலை கிளை செயலாளர் மூக்கப்பன்,அலெக்ஸ், சாக்கப்பன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.முடிவில் மாவட்ட பிரதிநிதி டி.ஆர். எஸ். சென்னையன் நன்றி கூறினார்.

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் சங்கரன்கோவில்,**
**அ.தி.மு.ஆ1/355/2024**
**க.சோலையம்மாள்,**
**க.பெ. கருப்பையா,**
**க.எண். 3/31, மேலக்காலனி,**
**சின்ன ஒப்பனையாள்புரம்,**
**சங்கரன்கோவில் வட்டம்,**
**-மனுதார்**
**எதிர்**
**1. வட்டாட்சியர், சங்கரன்கோவில்,**
**2. சார் பதிவாளர், கரிவலம்வந்தநல்லூர்,**
**-எதிர்மனுதாரர்**
**அறிவிப்பு**
**எனது தந்தை சோலை, த.பெ. சோலை என்பவர் கடந்த 06.01.2006 அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.**
**க.சோலையம்மாள்,**
**சின்ன ஒப்பனையாள்புரம்.**

தென்காசி மாவட்டத்தில்

## தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் சார்பில் உறுப்பினர்கள் சேர்க்கை முகாம்

### தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் தலைமையில் நடந்தது



தென்காசி அக்.21:

தென்காசி மாவட்டம் சங்கரன் கோவிலில் உள்ள சங்குபுரம் மூன்றாம் தெருவில் அமைந்துள்ள இந்து நாடார் மகிமைக்கு பாத்தியப்பட்ட அருள்மிகு வடகாசியம்மன் திருக்கோவில் வளாகத்தில் தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் சார்பில் உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு ஊர் தலைவர் ராமர் தலைமை தாங்கினார் செயலாளர் சிலுவைராஜ் முன்னிலை வகித்தார் இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தமிழ்நாடு நாடார் உறவினர்கள் கூட்டமைப்பின் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார், பொதுச் செயலாளர் ஜான் டேவிட், தென்காசி மேற்கு மாவட்ட தலைவர் குருசாமி நாடார், மாநில செயற்குழு உறுப்பினர் பால சுப்பிரமணிய நாடார், இளைஞர் அணி தலைவர் வர்கீஸ் ராஜா ஆகியோர் பெருந்தலைவர் காமராஜர் திருவுருவப் படத்தை திறந்து வைத்தனர்.தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் உறுப்பினர்கள் சேர்க்கையை தொடங்கி வைத்து பேசியதாவது

நாடார் சமுதாயத்தால் நடத்தப்படுகின்ற விழாக்களில் அரசியலை புகுத்த கூடாது என்றும் இன்றைய இளைய தலைமுறையினர் சமுதாயத்தைப் பற்றியும் சமுதாயத்திற்காக உழைத்த தலைவர்களைப் பற்றியும் நாட்டுக்காக உழைத்த நாடார்களை பற்றியும் முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டும் நாம் யார் எப்படிப்பட்ட சமுதாயத்தில் பிறந்திருக்கிறோம் என்பதை ஒவ்வொரு இளைஞனும் உணர வேண்டும் சமுதாய வரலாறுகளையும் முன்னோர்கள் நாட்டுக்காகவும் சமூகத்திற்காகவும் சமுதாயத்திற்காகவும் ஆற்றிய சேவைகளை தெரிந்து கொள்ள வேண்டும் மதங்களுக்கும் அரசியலுக்கும் அப்பாற்பட்டு இனத்தால் அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும் என்று பேசினார். இந்த நிகழ்ச்சியில் மனோஜ் குமார், பால சுரேஷ், பாண்டியராஜன், வெற்றிவேல், தர்மராஜ், ராமர், நந்தவேல் மற்றும் சமுதாய பெரியவர்கள் கலந்து கொண்டனர்

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

வீரபாண்டியன்பட்டணத்தில்

## மரியாயின் சேனை ஜெபமாலை மாதா பவனி



திருச்செந்தூர். அக். 21:

வீரபாண்டியன்பட்டணத்தில் மரியாயின் சேனை ஜெபமாலை மாதா பவனி நடந்தது.

தூத்துக்குடி மறை மாவட்ட மரியாயின் சேனையார் மற்றும் வீரபாண்டியன் பட்டணம் பங்கு பேரவை சார்பில் வீரபாண்டியன்பட்டணம் புனித தோமையார் ஆலயம் முன்பு மாதா திருவுருவ சப்பர பவனி மற்றும் ஜெபமாலை பவனி நடந்தது. இதில் குழந்தைகள் முதல் பெரியவர் வரை திரளான இறைமக்கள் மற்றும் மறை மாவட்டத்தைச் சேர்ந்த மாதா சபையினர் பங்கேற்றனர்.

அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் எழுந்தருளிய மாதாவிற்கு முன்பும் இறைமக்கள் வீரபாண்டியன்பட்டணம் வீதிகளில் பவனி வந்து மீண்டும் ஆலயம் சேர்ந்தனர். தொடர்ந்து ஆலய பங்குத் தந்தை அலாய்சியஸ் அடிகளார், உதவி பங்குத்தந்தை சிலுவை டிமெல் ஆகியோர் தலைமையில் கூட்டு திருப்பலி நடைபெற்றது.

ஏற்பாடுகளை மறை மாவட்ட மரியாயின் சேனையார் ஒருங்கிணைப்பாளர் சகாயராஜ் வல்தாரிஸ் மற்றும் வீரபாண்டியன்பட்டணம் பங்கு மக்கள் செய்திருந்தனர்.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் தென்காசி**
**IA NO 3/2024 IN**
**IN AS NO 45/2021**
**S. பாண்டி ராஜ் மேல்முறையீட்டாளர்**
**-மனுதாரர்**
**எதிர்**
**1)மாரியப்பன் (இறப்பு)**
**2)அருணாசலத் தேவர்**
**1 முதல் 3 எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளர்கள்**
**3)சங்கு தேவர் (இறப்பு)**
**4)தமிழ்ச்செல்வி**
**5)சீதையம்மாள்**
**கட்சிசேர்க்கப்படவேண்டியவர்கள்**
**6)முருகம்மாள்**
**7)முருகம்மாள்**
**-4 முதல்7எதிர்மனுதாரர்கள்**
**அறிவிப்பு**
**மேற்படி மேல்முறையீட்டாளர் சமூகம் நீதிமன்றத்தில் மேற்படி இடைக்கால மனுவில் (தமிழ்ச்செல்வி 4ம் எதிர்மனுதாரர்கள்) கட்சி சேர்க்கப்பட வேண்டியவர்கள் என்ற அடிப்படையில் மனு தாக்கல் செய்து மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு மேற்படி எதிர்மனு தாரராக கட்சி சேர்க்கப்பட வேண்டியவர்களுக்கு பலமுறை நோட்டீஸும் அறிவிப்பும் அழைப்பானையும் அனுப்பியும் சமூக நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக வில்லை. எனவே மேற்படியார் சமூக நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டி 29/10/2024அன்று காலை 10 மணிக்கு நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டும் என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது தவறும் பட்சத்தில் ஒருதலை பட்சமாக கருதப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது மேற்படி அறிவிப்பு நீதிமன்ற உத்தரவின் பேரில்**
**ஹ.அகமது அப்துல்காதர் பி.எல்.எம்.பி.ஏ.**
**அட்வகேட்,**
**தென்காசி**

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி.**
**கிருஷ்ணசாமி,**
**தபெ. முத்துவேல்த்தேவர்.**
**கஎண்: 14, ஓடைமேலத்தெரு-4, சங்கரலிங்கபுரம், கோவில்பட்டி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.**
**-மனுதார்**
**எதிர்**
**வட்டாட்சியர், கோவில்பட்டி.**
**ஆணையாளர், கோவில்பட்டி நகராட்சி.**
**-எதிர்மனுதார்கள்**
**அறிவிப்பு**
**எனது தாத்தா (தாயாரின் தகப்பனார்) அழகுமுத்துத்தேவர் தபெ. ராமுத்தேவர் என்பவர் கடந்த 10.12.1976. அன்று கஎண்: 68, தெற்குதெரு-2, சங்கரலிங்கபுரம், கோவில்பட்டி டவுண், கோவில்பட்டி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம். என்ற முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார். அம் மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்துமூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்து கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கபடுகிறது.**
**இப்படிக்கு**
**கிருஷ்ணசாமி**

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி.**
**சீனிவாசகம், தபெ. தாமஸ்,**
**கஎண்: 7A/42, பாரதிநகர் 6வது தெரு, கோவில்பட்டி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.**
**-மனுதார்**
**எதிர்**
**வட்டாட்சியர், கோவில்பட்டி.**
**சார்பதிவாளர், கோவில்பட்டி.**
**-எதிர்மனுதார்கள்**
**அறிவிப்பு**
**எனது உடன்பிறந்த சகோதரி சுகிபாய் கபெ. கணேசன் என்பவர் கடந்த 01.06.2020. அன்று கஎண்: 703/11, முத்துநகர், திட்டங்குளம் கிராமம், கோவில்பட்டி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம். என்ற முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்துமூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்து கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப் படுகிறது.**
**இப்படிக்கு**
**சீனிவாசகம்,**



தென்காசி தெற்கு மாவட்ட திமுக அலுவலகமான கலைஞர் அறிவாலத்தில் அமைச்சர் கே.என்.நேருவை தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன், வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ, ஒன்றிய செயலாளர் அழகுசுந்தரம், மாவட்ட கவுன்சிலர் வழக்கறிஞர் கனிமொழி ஆகியோர் வரவேற்றனர்

# நாலுமாவடியில் சாலை பணி: அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்தார்



திருச்செந்தூர் அக் 21

நாலுமாவடியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்தார்.

நாலுமாவடியில் 1வது வார்டான டேவிட் நகரில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.13.45 லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி துவங்கியது. நிகழ்ச்சிக்கு பஞ்., தலைவர் இசக்கிமுத்து தலைமை வகித்தார். துணைத்தலைவர் திருமால் முன்னிலை வகித்தார். பஞ்., செயலர் வெள்ளத்துரை வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் சாலை அமைக்கும் பணியை கொடியசைத்து துவக்கி வைத்தார். இதனைத்தொடர்ந்து குரும்பூர் புதுக்கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.6 லட்சம் மதிப்பீட்டில் பயணிகள் நிழற்குடை அமைக்கும் பணியை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

இதில் ஆழ்வை யூனியன் சேர்மன் ஜனகர், ஆழ்வை யூனியன் பிடிஓ பாக்கியலீலா, இன்ஜினீயர் வெள்ளப்பாண்டி, திமுக மாநில வர்த்தக அணி இணை செயலாளர் உமரிசங்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராமஜெயம், ஆழ்வை ஒன்றிய செயலாளர்கள் சதீஷ்குமார், நவீன்குமார், பொருளாளர் பாதாளமுத்து, கச்சனாவிளை பஞ்., தலைவர் கிங்ஸ்டன், வார்டு உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தென்காசி ஊராட்சி ஒன்றியம், சிற்றாறு வடிநிலக் கோட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் வெள்ளத் தடுப்பு பணிகளை கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சங்கரன்கோவிலில்

# தென்காசி வடக்கு மாவட்ட திமுக மாணவர் அணி நிர்வாகிகளுக்கு நேர்காணல்

## மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ பங்கேற்பு



**சங்கரன்கோவில். அக்.21.**

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதிகளுக்கான ஒன்றிய நகர , பேரூர் கழக மாணவ அணி நிர்வாகிகள் நேர்காணல் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள வடக்கு மாவட்ட அலுவலகத்தில் வைத்து நடந்தது. வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமை வகித்தார். மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் உதயகுமார் வரவேற்றார். இதையடுத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் புதிதாக ஒரு அமைப்பாளர், 1 பெண் உள்ளிட்ட 5 துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்கான நேர்காணலை மாணவரணி மாநில தலைவர் ராஜிவ்காந்தி, மாநில துணைச்செயலாளர்கள் அதலை செந்தில்குமார், பூர்ணசங்கீதா ஆகியோர் நடத்தினர். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் யூஎஸ்டி சீனிவாசன், ஒன்றியச் செயலாளர்கள் லாலாசங்கரபாண்டியன், சேர்மத்துரை, வெள்ளத்துரை,நகரச் செயலாளர் பிரகாஷ், பேரூர் செயலாளர் மாரிமுத்து, சங்கரன்கோவில் நகராட்சி சேர்மன் உமா மகேஸ்வரி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் சதிஷ்குமார், வீரமணிகண்டன், தினேஷ், முத்துலட்சுமி, மணிகண்டன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்டத்திற்கு வருகை தந்த அமைச்சர் கே.என்.நேருவிற்கு வரவேற்பு



தென்காசி அக்.21:

கழக முதன்மைச் செயலாளர் மற்றும் நகர்புறம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கு தென்காசி மாவட்டத்திற்கு வருகை தந்தையொட்டி தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வே.ஜெயபாலன் முன்னிலையில் தென்காசி தெற்கு மாவட்ட திமுக தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் வேலுச்சாமி பொன்னாடை அணிவித்து வரவேற்று சிறப்பித்தார். இந்நிகழ்வில் தென்காசி நகரச் செயலாளர் சாதீர் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டு அமைச்சரை வரவேற்று மகிழ்ந்தனர்.

# அதிமுக ஆண்டு விழா: மேலகரத்தில் இலவச கண் மருத்துவ முகாம்



தென்காசி அக்.21:

அஇஅதிமுகவின் 53வது ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு தென்காசி மாவட்டம் மேலகரம் விட்டில் ஹாஸ்ட் சிறுவர் பள்ளியில் அதிமுக பிரமுகர் டேனி அருள் சிங் ஏற்பாட்டில் இலவச கண் மருத்துவ முகாம் மற்றும் ரத்தச் சர்க்கரை பரிசோதனை முகாம் நடைபெற்றது. டாக்டர் அகர்வால் மருத்துவமனை மற்றும் அப்பல்லோ பார்மசி நிறுவனம் இணைந்து இம் முகாமில் பரிசோதனை மற்றும் சிகிச்சை ஆலோசனைகள் வழங்கினர். இந்த முகாமில் 118 நோயாளிகள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர், அதில் 5 பேர் முகாம் முடிந்த உடனே அறுவை சிகிச்சைக்கு அகர்வால் மருத்துவமனை அழைத்துச் செல்லப்பட்டனர், டேனி அருள்சிங் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பிரபாகர், மதன் குமார் முன்னிலை வகித்தனர், பள்ளி நிர்வாகி டேவிஸ் பென் சாம் ஷீபா, ஆசிரியர்கள் காளிதாஸ், சுப்ரியா, ஜெயா, திவ்யா, பாப்பாத்தி, மணிமேகலை, விஜி, மீரா, ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# கோவில்பட்டி ராகவேந்திரா சேவா அறக்கட்டளை சார்பில் அன்னதானம்



கோவில்பட்டி அக் 21

கோவில்பட்டி புது ரோடு முச்சந்தி ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோவில் வைத்து ஸ்ரீ ராகவேந்திரா சேவா அறக்கட்டளை சார்பில் அன்னதானம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மகாலட்சுமி ஆட்டோ கன்சல்டிங் காளிராஜ் வரவேற்றார். ஜீவ அனுக்கிரக அறக்கட்டளை நிறுவனர் ராஜேந்திரன், தொழிலதிபர் எஸ் கே அசோக், செல்வ விநாயகர் கோவில் தர்மகர்த்தா முருகன், மிலிட்டரி சந்திரசேகரன் , ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சிக்கு பராசக்தி மேட்ச் இண்டஸ்ட்ரீஸ் தொழிலதிபர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளர்களாக தொழிலதிபர் அருண் பேக்கரி மாடசாமி, தொழிலதிபர் கழுகுமலை பெரிய ராஜா, கலந்து கொண்டனர்.தொழிலதிபர் மாடர்ன் ஹார்டுவேர்ஸ் ரமேஷ் குமார், பொங்கல் பிரசாதம் வழங்கினார். மேலும் கோவில்பட்டி வட்டாட்சியர் சரவண பெருமாள் அன்னதானத்தை துவங்கி வைத்தார். இந் நிகழ்ச்சியில் கோவில்பட்டி விஏஓ மந்திர சூடாமணி தொழிலதிபர்கள் விஜி என்ற ராஜா தனபால் கொல்லம் சேகர், ஆசிரியர் கயத்தாறு கணேசன், மாவட்ட கல்வி அலுவலக உதவியாளர் மூர்த்தி, நகர் மன்ற உறுப்பினர் சண்முகவேல், பசுமை இயக்கம் செந்தில், மற்றும் அறக்கட்டளை நிறுவனர் சீனிவாசன், தலைவர் ஜெயக்கொடி, செயலாளர் ஜோதி காமாட்சி, பொருளாளர் கார்த்திகேயன், மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் நடராஜன, பாலமுருகன், நகராட்சி கவுன்சிலர் லவ ராஜா, கதிரேசன், சண்முகசுந்தரம், செல்வம், தங்கராஜ், எஸ் பி பாண்டியன், முத்து மாரியப்பன், மாரிமுத்து, பெரியசாமி, ஆகியோர் கலந்து கொண்டனர். அரசு ஒப்பந்ததாரர் காளிதாஸ் நன்றி கூறினார்.

# கிராம நிர்வாக அலுவலருக்கு 6 ஆண்டு சிறை

**தூத்துக்குடி.அக்.21.**

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியைச் சேர்ந்தவர் ரெங்கம்மாள். இவருடைய பெற்றோர் வெங்கடசாமி-லட்சுமி அம்மாள் ஆகியோருக்கு சொந்தமான 2.52 ஏக்கர் நிலம் ஓட்டப்பிடாரம் அருகே கொல்லங்கிணறு கிராமத்தில் உள்ளது. இந்த இடத்தை ரெங்கம்மாள், அவரது சகோதரி நளினி ஆகியோரது பெயரில் மணியாச்சியை சேர்ந்த முருகன் போலியாக பவர் பத்திரம் தயாரித்து பதிவு செய்ததாகவும், இதற்கு அதே கிராமத்தை சேர்ந்த கிராம நிர்வாக அலுவலர் அய்யலுசாமி உடந்தையாக இருந்ததாகவும் கூறப்படுகிறது. அதன்பின்னர் 2009-ம் ஆண்டு அந்த இடம் முருகனின் மனைவி மாடத்தி பெயரிலும், 2010-ம் ஆண்டு கொல்லங்கிணறை சேர்ந்த ஆனந்த சுதர்சன் பெயரிலும் பத்திரப்பதிவு செய்யப்பட்டது. இதுபற்றி அறிந்த ரெங்கம்மாள் இதுகுறித்து நாரைக்கிணறு போலீசில் புகார் செய்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இதுதொடர்பான வழக்கு ஓட்டப்பிடாரம் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜெயந்தி ஓய்வு பெற்ற கிராம நிர்வாக அலுவலர் அய்யலுசாமிக்கு 6 ஆண்டு சிறை தண்டனையும், ரூ.10 ஆயிரம் அபராதமும், மாடத்தி, ஆனந்த சுதர்சன் ஆகியோருக்கு தலா 2 ஆண்டுகள் சிறை தண்டனையும் விதித்து தீர்ப்பு கூறினார். வழக்கு நடந்த காலத்தின்போது முருகன் இறந்துவிட்டார். இந்த வழக்கில் மனுதாரர் தரப்பில் வக்கீல் விஜி வாதாடினார்.



**சுரண்டை அவ்வை தமிழ்ச் சங்க விழாவில் கவிதை மற்றும் கட்டுரை போட்டிகளில் அச்சன்புதூர் இந்தியன் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி 5 ஆம் வகுப்பு மாணவிகள் அனபா கவிதைப் போட்டியில் இரண்டாம் பரிசையும், ஆப்ரீன் கட்டுரை போட்டியில் இரண்டாம் பரிசையும் பெற்றனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு திருநெல்வேலி பாராளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ் பரிசுகளை வழங்கினார்**

# கோவில்பட்டி அதிமுக மத்திய மேற்கு ஒன்றியம் சார்பில் செயல்வீரர் கூட்டம்

## முன்னாள் அமைச்சர்கள் திண்டுக்கல் சீனிவாசன், கடம்பூர் ராஜு பங்கேற்பு



கோவில்பட்டி அக் 21

கோவில்பட்டி அதிமுக மத்திய மற்றும் மேற்கு ஒன்றிய கழகம் சார்பில் வேலன் திருமண மண்டபத்தில் கழக செயல் வீரர்கள் கூட்டம் நடந்தது. மத்திய ஒன்றிய செயலாளரும் யூனியன் வைஸ் நிறுவனமான பழனிச்சாமி மற்றும் மேற்கு ஒன்றிய செயலாளர் அழகர்சாமி ஆகியோர் தலைமை வகித்தனர். கூட்டத்தில் பேசிய முன்னாள் அமைச்சர் சீனிவாசன் குறுக்கு வழியில் முதல்வரானவர் கருணாநிதி இன்று ராஜ வம்சம் போல் செயல்படுகின்றனர் என்று பேசினார்.

கடம்பூர் ராஜு எம்எல்ஏ சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் முன்னாள் எம்எல்ஏக்கள் என்.கே. பெருமாள், சின்னப்பன், மோகன், கிழக்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜ், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் செல்வகுமார் இணைச் செயலாளர் நீலகண்டன் முன்னாள் மாவட்ட பஞ்சாயத்து தலைவர் சத்யா, மாநில பொதுக்குழு உறுப்பினர் ராமச்சந்திரன், மாநில வழக்கறிஞர் பிரிவு துணைச் செயலாளர் ஈஸ்வரமூர்த்தி, மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர் ஜி எம் சங்கர் கணேஷ், மாவட்ட இளைஞர் இளம் பெண்கள் பாசறை செயலாளர் எம். ஆர். வி. கவியரசன், எட்டையாபுரம் பெருநகர செயலாளர் ராஜகுமார், மாவட்ட எம்ஜிஆர் மன்ற கழுகுமலை கருப்பசாமி, மாவட்ட மகளிர் அணி செயலாளர் பத்மாவதி , மாவட்ட கலைப்பிரிவு செயலாளர் போடுசாமி, ஆவின் தலைவர் தாமோதரன், நகர அம்மா பேரவை செயலாளர் ஆபிரகாம் அய்யாதுரை, நகர்மன்ற உறுப்பினர் செண்பகமூர்த்தி, மாவட்ட மாணவரணி துணைத் தலைவர் அத்தைகொண்டான் செல்வகுமார், மாவட்ட பிரதிநிதி அய்யன்ராஜ், மாவட்ட மாணவரணி துணைத் தலைவர் பொறியாளர் தாஸ் அய்யனுராஜ், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள் முருகேசன், அங்குசாமி, இளைஞர் பாசறை வானரமூட்டி பழனி குமார் தகவல் தொழில் நுட்ப அணி மாரிமுத்து பாண்டியன் ஓப்பன்பட்டி கிளைச் செயலாளர் முருகன் இ எஸ் ஐ பாலு பாண்டவர்மங்கலம் விஜயன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

கூட்டத்தில் பேசிய முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் திமுக ஒரு ஊழல் கட்சி அந்த காலத்திலேயே அண்ணாவை முதல்வராகியவர் எம்ஜிஆர். அண்ணா மறைவுக்குப் பின் நெடுஞ்செழியன் முதல்வராக இருக்க தகுதியானவர் என்று எல்லோரும் நினைக்கும் போது கருணாநிதி எம் ஜி ஆர் வீட்டுக்கு சென்று அவர் காலை பிடித்து எப்படியாவது என்னை முதல்வராகங்கள் என்று கூறினார் அன்று எம்ஜிஆர் முதல்வர் ஆக்காவிட்டால் இன்று கருணாநிதி குடும்பமே இருந்திருக்காது ஆனால் திமுகவை தன்வசப்படுத்திக் கொண்ட கருணாநிதி இன்று அவரது மகன் பேரன் என ராஜ வம்சம் போல் நடத்திக் கொண்டிருக்கிறார்.

கடம்பூர் ராஜு எனக்கு சின்னப் பிள்ளையிலிருந்து தெரியும் கடம்பூர் ஜனார்த்தனன் கூட அப்பவே தலைமைக் கழகத்திற்கு வருவார் டிடிவி தினகரன் ஒரு நல்லவர் அல்ல அவரை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் கடம்பூர் ராஜ் அம்மாவை பார்த்துக் கொள்வதற்காக உதவியாளராக வந்த சசிகலா பிற்காலத்தில் கட்சியை கைப்பற்ற கூடிய சூழ்நிலை வந்துவிட்டது இவர்கள் இல்லாமல் அம்மாவை பார்க்க முடியாது என்ற நிலை இருந்த போது தினகரன் வைத்தது தான் சட்டம் அம்மாவின் மறைவுக்கு பின் தனது சித்தியை முதல்வராக முயற்சி செய்தார் அது தோற்றுப் போனார்

பின்பு தானே முதல்வராக சூழ்ச்சி செய்தார் அதிலும் தோல்வியை கண்டார் ஓபிஎஸ் இவர்களின் தயவில் மூன்று முறை முதல்வரானார் ஆனால் எடப்பாடி பழனிசாமி மக்களின் முதல்வராக தலை நிமிர்ந்து நின்றார் வரும் 2026 ல் மீண்டும் இபிஎஸ் முதல்வராக இவ்வாறு பேசினார்.

செங்கோட்டையில்

# தென்காசி வடக்கு மாவட்ட அதிமுக சார்பில் 53ம் ஆண்டு துவக்க விழா பொதுக்கூட்டம்



செங்கோட்டை, அக், 21,

செங்கோட்டை அம்மா உணவகம் அருகில் வைத்து தென்காசி வடக்கு மாவட்ட அஇஅதிமுக சார்பில் 53ஆம் ஆண்டு துவக்க விழா பொதுக்கூட்டம் நடந்தது.

கூட்டத்திற்கு தென்காசி வடக்குமாவட்டச்செயலாளரும் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினருமான கிருஷ்ணமுரளி (எ) குட்டியப்பா தலைமை தாங்கினார். மாவட்ட அவைத்தலைவர் வி .பி.மூர்த்தி, மாவட்ட இணைச் செயலாளர் சண்முகப்ரியா, துணைச் செயலாளர் பொய்கை.சோ.மாரியப்பன், பொதுக்குழு உறுப்பினர்கள் எல்ஐசி.முருகையா, காளிராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகரச் செயலாளர் கணேசன் அனைவரையும் வரவேற்று பேசினார். நகர அவைத்தலைவர் தங்கவேலு தொகுப்புரையாற்றினார். கழக அமைப்புச் செயலாளர் முன்னாள் அமைச்சர் அன்வர்ராஜா, அமைப்புச்செயலாளர் ஏகே.சீனிவாசன், திரைப்பட இயக்குநர் கழக கலைப் பிரிவு இணைச்செயலாளர் நாஞ்சில் பிசி.அன்பழகன், . தலைமை கழக செயற்குழு உறுப்பினரும் கழக மகளிரணி செயலாளர் முன்னாள் அமைச்சர் வீஎம்.ராஜலெட்சுமி, அனைத்துலக எம்ஜிஆர் மன்ற இணைச்செயலாளர் சுப்பையா பாண்டியன், அனைத்துலக எம்ஜிஆர் மன்ற துணைச்செயலாளர் கண்ணன்(எ)ராஜு, திருநெல்வேலி தகவல் தொழில்நுட்ப பிரிவு மண்டலச்செயலாளர் சிவஆனந்த் ஆகியோர் சிறப்புரையாற்றினர். நிகழ்ச்சியில் மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், ஒன்றியச்செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர்கள், செங்கோட்டை நகரத்திற்குட்பட்ட மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், அண்ணா தொழிற்சங்க நிர்வாகிகள், பணிமனை தொழிற்சங்க நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர்கள், முன்னாள் நிர்வாகிகள், நகர கழக நிர்வாகிகள், வார்டு நிர்வாகிகள், நகர எம்ஜிஆர் மன்ற நிர்வாகிகள், அம்மா பேரவை நிர்வாகிகள், எம்ஜிஆர் இளைஞரணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் நகர் மன்ற துணைத்தலைவர் நவநீதகிருஷ்ணன் நன்றி கூறினார்.

சாம்பவர் வடகரையில்

# திமுக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம்



**தென்காசி அக.21:**

கழகத்தலைவர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சரின் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்கக் கூட்டம் தென்காசி தெற்கு மாவட்ட திமுக சார்பில் தெற்கு மாவட்ட செயலாளர் ஜெயபாலன் தலைமையில் சுந்தரபாண்டியபுரம் பேரூர் செயலாளர் பண்டாரம் வரவேற்பில் தென்காசி கிழக்கு ஒன்றியம் செயலாளர் அழகு சுந்தரம் சுந்தரம் தொகுப்புரையில் திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன் மற்றும் திமுக தலைமை கழக பேச்சாளர் சைதை சாதிக் சிறப்புரையில் கழகத் மாவட்ட துணைச் செயலாளர் கென்னடி, மாவட்ட பொருளாளர் ஷெரீப், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆறுமுகசாமி, பொதுக் குழு உறுப்பினர் ராஜேஷ்வரன், ரஹீம், சாமித்துரை, நகர செயலாளர்கள் வெங்கடேசன் சாதீர், கணேசன், அப்பாஸ், ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன், திவான் ஒலி, அழகு சுந்தரம், மகேஷ் மாயவன், பேரூர் செயலாளர்கள முத்தையா, சுடலை, ராஜராஜன், வெள்ளத்துரை, குட்டி சங்கர், கோபால், சார்பு அணி நிர்வாகிகள் டாக்டர் மாரிமுத்து, வக்கீல் வேலுச்சாமி, ஷேக் அப்துல்லா, மாணவரணி ரமேஷ், மணிகண்டன், இளைஞர் அணி கிருஷ்ணராஜ், சுப்ரமணியன், சிவக்குமார், தகவல் தொழில் நுட்ப அணி அழகு தமிழ் சங்கர், சபிக் அலி, வக்கீல் மணிகண்டன், கலாநிதி, கரிசல் வேலுசாமி, மாரி முத்து பாண்டியன், வளன் அரசு, கருப்பண்ணன், வக்கீல் ரகுமான் சதத், வக்கீல் முத்துக்குமாரசாமி, ராம்ராஜ், முத்து சுப்பிரமணியன், சங்கீதா, ஷோபனா சரஸ்வதி, திருமலைச்செல்வி, சபர் நிஷா, உட்பட பலர் கலந்து கொண்டனர்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# அருப்புக்கோட்டையில் நடந்து வரும் புறவழிச்சாலை பணிகள்

## வருவாய் துறை அமைச்சர் நேரில் ஆய்வு



**விருதுநகர், அக். 21-**

அருப்புக்கோட்டையில் ரூ.154.98 கோடி மதிப்பில் அருப்புக்கோட்டை புறவழிச்சாலை அமைக்கப்பட்டு வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெயசீலன், தலைமையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரன் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அமைச்சர் பேசியதாவது. அருப்புக்கோட்டை நகருக்கு மேற்கு புறவழிச்சாலை அமைக்கும் பணிகள் மற்றும் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிகளுக்கு ரூ.119.58 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தப் பணிகளில் 22 பெட்டிப்பாலங்களும், சிறுபாலங்களும், 10 சிறுபாலங்களும், 3 சாலை சந்திப்புகளையும், மேலும் 1 இரயில்வே மேம்பாலம் மானாமதுரை - விருதுநகர் இரயில்வே வழித்தடத்தின் குறுக்கிலும் உள்ளடக்கியுள்ளது.

தற்போது இப்புறவழிச் சாலையில் மொத்தம் உள்ள 22 பெட்டிப்பாலங்களும் 9 சிறுபாலங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1 சிறுபாலத்தில் மேல் தளம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. சாலை பணிகளில் மொத்தமுள்ள 9.905 கி.மீ - தூரத்தில் 7.50 கி.மீ சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணியில் இருபுறமும் பாலத்தின் தூண்கள் அமைக்கும் பணி முடிந்துள்ளது.

மொத்தமுள்ள 9.905 கி.மீ நீள சாலையில் 585.00 மீ சாலை சந்திப்பு பகுதிகள் ஆகும். 936.00 மீ இரயில்வே மேம்பாலப் பகுதிகள் ஆகும். 7.50 கி.மீ சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 884.00 மீ -ல் சாலைப் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், அருப்புக்கோட்டை புறவழிச்சாலை அமைப்பதற்கு நில எடுப்பு பணிக்கு மட்டும் ரூ.35.40 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் புறவழிச் சாலை பணிகள் முடிவடையும் பட்சத்தில் போக்குவரத்து நெரிசலுள்ள மற்றும் குறுகலான, வாகன நெரிசல் உள்ள அருப்புக்கோட்டை நகர பகுதியினை தவிர்த்து சிரமமின்றி பயணிக்க ஏதுவாக இப்புறவழிச்சாலை அமையும் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலைத்துறை திட்டங்கள் திருநெல்வேலி லிங்குசாமி, உதவி கோட்ட பொறியாளர் உமாதேவி, தாசில்தார் செந்தில் வேல். அருப்புக்கோட்டை முன்னாள் நகர மன்ற தலைவர் சிவபிரகாசம் ,துணை தலைவர் பழனிச்சாமி, நகர கழக செயலாளர் ஏ கே மணி, திமுக ஒன்றிய கழக செயலாளர் பாலகணேஷ், பொன்ராஜ் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அழகு ராமானுஜம் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வீட்டின் அருகே பட்டாசு தயாரித்தவர் கைது

**விருதுநகர், அக். 21-**

வெம்பக்கோட்டை அருகே வீட்டின் அருகே பட்டாசு தயாரித்தவரை போலீசார் கைது செய்தனர்.

ஏழாயிரம்பண்ணை போலீசார் கீழச் செல்லையாபுரம் பகுதியில் ரோந்து சென்றனர். அப்போது, அதே பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம்(31) என்பவர் வீட்டின் அருகே 60 சாட் வெடிக்கான குழாய்கள் வைத்திருந்தது தெரிய வந்தது. இதையடுத்து அவரை போலீசார் கைது செய்தனர்.

வெம்பக்கோட்டை அருகே அனுமதியின்றி வெள்ளைத் திரிகளைவைத்திருந்தவரை போலீசார் கைது செய்தனர். வெம்பக்கோட்டை போலீசார் தா.கோட்டையூர் பகுதியில் ரோந்து சென்றனர். அப்போது, தவிட்டுராஜ் என்பவர் வீட்டில் அனுமதியின்றி பட்டாசுக்கான வெள்ளைத் திரி வைத்திருந்தது தெரிய வந்தது. இதையடுத்து அவரை போலீசார் கைது செய்தனர்.



**மதுரை-இராமநாதபுரம் சினிமா விநியோகஸ்தர்கள் சங்கத்தின் சார்பாக தீபாவளி ஸ்வீட் பாக்ஸ் சங்க உறுப்பினர்களுக்கு சங்க செயலாளர் எம்.ஓ. சாகுல்ஹமீது வழங்கினார். அருகில் இணைச்செயலாளர் ஆர். தாமஸ், பொருளாளர் ஆர்.எம். மாணிக்கம், செயற்குழ உறுப்பினர்கள் எல்.சேகர், வி. ஞான தேசிகன் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் உள்ளனர்.**



**மதுரை அனுப்பானடி அம்பேத்கார் நகரில் உள்ள மந்தையம்மன் திருக்கோவிலின் 12- ம் ஆண்டு புரட்டாசி பெருவிழாவில் மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. கலந்து கொண்டு வழிபட்டார். அருகில் அ.தி.மு.க.நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, ஆர்.அண்ணாத்துரை,பா.குமார், சக்திவிநாயகர்பாண்டியன், எம்.எஸ்.கே.மல்லன், வி.பி.ஆர்.செல்வகுமார், அனுப்பானடி பாலகுமார் ஆகியோர் உள்ளனர்.**

# இயற்கை மேம்பாட்டு தன்னார்வ அறக்கட்டளை சார்பில் மறவன்குளத்தில் மரக்கன்றுகள் நடும் விழா



**திருமங்கலம், அக். 21-**

திருமங்கலம் பகுதியில் சுற்றுச்சூழலை மேம்படுத்திடும் வகையில் இயற்கை மேம்பாட்டு தன்னார்வ அறக்கட்டளை சார்பில் மறவன்குளத்தில் 500க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடும் விழா சிறப்பாக நடைபெற்றது.

மதுரை மாவட்டம்,திருமங்கலம் பகுதியில் சுற்றுச்சூழலை மேம்படுத்திடும் வகையில் இயற்கை மேம்பாட்டு தன்னார்வ அறக்கட்டளையின் சார்பில் 10ஆயிரம் மரக்கன்று களை நடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.இதன் ஒரு பகுதியாக இயற்கை மேம்பாட்டு தன்னார்வ அறக்கட்டளையின் நிறுவனரும், மாற்றுத் திறனுடைய இயற்கை ஆர்வலருமான பி.கண்ணன் ஏற்பாட்டின் பேரில் மறவன்குளம் கண்மாய் கரையில் 500க்கும் மேற்பட்ட பயன்மிகு,பலன் தரு மரக்கன்றுகள் நடும் பணிகள் நேற்று சிறப்பாக நடைபெற்றது.

மறவன்குளம் பஞ்சாயத்து தலைவர் மணி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வினில் சமூக ஆர்வலர்கள்; செண்பகா முரளிதரன், செங்கப்படை பாண்டி,ஆலம்பட்டி காமராஜ் மற்றும் அப்பகுதியைச் சேர்ந்த இயற்கை ஆர்வலர்கள்,தன்னார்வ மாணவர்கள் இணைந்து மறவன்குளம் கண்மாய் கரை முழுவதிலும் 500க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டனர். இந்நிகழ்வினில் கலந்து கொண்ட அனைவருக்கும் இயற்கை மேம்பாட்டு தன்னார்வ அறக்கட்டளை நிறுவனர் கண்ணன் பொன்னாடை அணிவித்து நன்றி தெரிவித்தார்.

# திருமலைக்கேணியில் சங்கடஹர சதுர்த்தி விழா

**நத்தம், அக். 21-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக்கேணி சுப்பிரமணியசுவாமி கோவில் உள்ளது. இக்கோவிலின் அருகில் உள்ள விநாயகர் சன்னதியில் சங்கடஹர சதுர்த்தி பூஜைகள் நடந்தது. இதையொட்டி . அருகம்புல், ரோஜா, மல்லிகை, உள்ளிட்ட பல பூமாலைகளை பக்தர்கள் காணிக்கையாக செலுத்தி சாமிதரிசனம் செய்தனர்.

முன்னதாக சிறப்பு பூஜைகளும், தீபாராதனைகளும் நடந்தது. இதே போல் நத்தம் நகரில் உள்ள அனைத்து விநாயகர் சன்னதிகளிலும் சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு பக்தர்கள் விளக்கேற்றி சாமி தரிசனம் செய்தனர்.

# சொக்கன்பட்டி சேவுகமூர்த்தி அய்யனார் திருக்கோவிலில் மகா கும்பாபிஷேக விழா



**மேலூர், அக். 21-**

மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் 18 பட்டி கிராமத்தைச் சேர்ந்த சொக்கன்பட்டி கிராமத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ சேவுகமூர்த்தி அய்யனார் மாட்டுத் தொழுவமும், ஸ்ரீ தல்லம்பாரி கருப்பர் மந்தையும் திருக்கோவில் வீட்டிற்கும் மஹா கும்பாபிஷேக விழா நேற்று 20-ந்தேதி நடைபெற்றது.

பக்தர்கள் 15 நாட்கள் காப்புகட்டி கடுமையான விரதம் இருந்து வந்தனர். கடந்த 18ஆம் தேதி வெள்ளிக்கிழமை முதல் கால யாக பூஜை மூல மந்திர ஹோமத்துடன் தொடங்கியது. 19ஆம் தேதியன்று மங்கள வாத்தியத்துடன் இரண்டாம் கால யாக பூஜையும், தீபாராதனை, சதுர்வேதம், ஆசீர்வாதத்துடன் மங்கள வாத்தியத்துடன் மூன்றாம் கால யாக சாலை பூஜை நடை பெற்றது. 20ந் தேதி ஞாயிற்றுகிழமை காலையில் நான்காம் கால யாகசாலை பூஜை கோ பூஜையுடன் தொடங்கியது. தொடர்ந்து யாகசாலை பூஜையில் இருந்து கடம் புறப்பட்டு காப்பு கட்டிய பக்தர்கள் கோயிலை சுற்றி வந்தனர். சிங்கம்புணரி ஸ்ரீ சேவுக மூர்த்தி ஆலய பரம்பரை சே.வி.சேவற்கொடியோன் சிவாச்சாரியார் தலைமையில் சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க அப்போது கருட பகவான் வானத்தில் வட்டமிட்டு பக்கதர்களுக்கு காட்சியளித்தார்.

தொடர்ந்து புனித நீரினை கும்பத்தில் ஊற்றி மகா கும்பாபிஷேக விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. தொடர்ந்து சேவுக மூர்த்தி அய்யனார், தல்லம்பாரி கருப்பர் மந்தை திருக்கோவிலில் சிறப்பு விஷேச தீபாராதனை நடைபெற்றது. கோவில் முன்பு அமைக்கப்பட்டிருந்த அறுசுவை அன்ன தானத்தில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர். கோவில் நிகழ்ச்சியில் கட்டழகன்பட்டி, பல்லவராயன்பட்டி, நொண்டிக் கோவில்பட்டி, புதுச்சுக் காம்பட்டி, நாகலிங்கபுரம், சிங்கம்புணரி மற்றும் மேலூர் சுற்றுபுற கிராமங்களிலிருந்து ஏராளமான பொதுமக்கள் சாமி தரிசனம் செய்தனர். நிகழ்ச்சி ஏற்பாட்டினை சொக்கம்பட்டி 10வது வார்டு ஸ்ரீ தல்லம்பாரி கருப்பர் சுவாமி கும்பிடும் யாதவ குல மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

# உலகளாவிய சூப்பர்ஸ்டார் ஜென்னி வழங்குகிறார் மந்த்ரா மியூசிக் வீடியோ இப்போது வெளியாகிறது

**சென்னை, அக். 21-**

உலகளாவிய எதிர்ப்பார்ப்பைத் தொடர்ந்து, பன்முகத் திறன் கொண்ட முன்னோடியான ஜென்னி, இன்று மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட புதிய சிங்கிள் மற்றும் மியூசிக் வீடியோ மந்த்ராவை கொலம்பியா ரெக்கார்ட்ஸ்/ ஓடாடேலியர் மூலம் வெளியிடுகிறார். இங்கே கேட்டு மகிழுங்கள் தனு மியூனோ (துவா லிபா, ஹாரி ஸ்டைல்ஸ்) இயக்கிய மியூசிக் வீடியோவை இங்கே கண்டு மகிழுங்கள்.

மந்த்ரா அவருடைய அடுத்த கட்டத்தை ஒரு ஆக்ரோஷமான மற்றும் மறுக்க முடியாத ஸ்டேட்மெண்ட் பாடலாக மாற்றுகிறது. கடினமான தாக்கத்தை ஏற்படுத்தும் பேஸ் லைனுக்கும் போல்டான பீட்டிற்கும் இடையே, சில நேரங்களில் பெண்கள் மகிழ்ச்சியாக மட்டுமே இருக்க வேண்டும் என்று தன்னம்பிக்கையுடன் அவர் பிரகடனம் செய்கிறார்.

பிரமிப்பான காட்சி அமைப்புடன் கூடிய இந்தப் பாடலில், நிச்சயமாக ஒரு பிளாக்பஸ்டருக்கான அனைத்து அம்சங்களும் உள்ளன.கொலம்பியா ரெக்கார்ட்ஸ் ஓடாடேலியரின் புதிதாக உருவாக்கப்பட்ட கூட்டாண்மையின் கீழ் ஜென்னியின் வரவிருக்கும் தனி ஆல்பத்தினுடைய முதல் பாடலாக மந்த்ரா வருகிறது.

தனித்துவமான ஸ்டைல் மற்றும் மிகச் சிறந்த பேஷன் உணர்விற்குப் புகழ் பெற்ற அவர், எண்ணற்ற பதிப்புகளின் (வோக், ரோலிங் ஸ்டோன், எல்லே மற்றும் பல) அட்டைகளை அலங்கரித்துள்ளார் என்பதுடன், சேனல், அடிடாஸ், பீட்ஸ் முதல் ஜென்டில் மான்ஸ்டர் வரை அனைத்து நிறுவனங்களுடனும் இணைந்து பணியாற்றினார். அவர் இணைந்து பணியாற்றும் பல்வேறு பிராண்டுகளுடன், மெட் காலா மற்றும் பாரிஸ் பேஷன் வீக்கிலும் அடிக்கடி பங்கேற்பவராக உள்ளார்.

# பெரியகுளத்தில் தொழில் முனைவோர் பயிற்சி முகாம்



**போடி,. அக். 21-**

தேனி மாவட்டம், பெரியகுளத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பாக தொழில் முனைவோர் பயிற்சி முகாம் நடைபெற்றது.

பெரியகுளம் வைகை அணை சாலையில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலைய கூட்ட அரங்கில், நகர்ப்புற மகளிர் திட்ட குழு சார்பாக மூன்று நாட்கள் தொழில் முனைவோர் சிறப்பு பயிற்சி முகாம் திட்ட இயக்குனர் ஜெயசங்கர், உதவி திட்ட அலுவலர் கங்கா கௌரி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்த பயிற்சி முகாமில் சுயஉதவிக் குழுக்களை சேர்ந்த ஏராளமான பெண்கள் உற்சாகமாக கலந்து கொண்டனர். இந்த பயிற்சி முகாமில் மகளிர் சுய உதவி குழு பெண்கள் அவர்களது உற்பத்தித்திறனை மேம்படுத்தவும், உற்பத்தி செய்யக் கூடிய பொருட்களை மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்றி விற்பனை செய்வது குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. உற்பத்தி செய்யும் பொருட்களுக்கும், மதிப்பு கூட்டப்பட்ட உணவு பொருட்களுக்கும் சான்றிதழ்கள் பெறுவது உள்ளிட்ட பல்வேறு நடைமுறைகள் குறித்த பயிற்சி வழங்கப்பட்டது.

மேலும், மூன்று நாட்கள் நடைபெற்ற சிறப்பு பயிற்சி முகாமில் மகளிர் சுய உதவிக் குழுவை சேர்ந்த ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர். இம்முகாமில் கலந்து கொண்ட பெண்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

# நடிகை ஜோதிகாவுடன் இணைந்து அழைப்பு விடுக்கும் சன்ஃபீஸ்ட் மேரி லைட்

**கோவை, அக் 21-**

தங்களது தாம்பத்திய வாழ்க்கையை சம அந்தஸ்துள்ளவர்களாக கொண்டாட தம்பதியருக்கு உத்வேகமளிக்கும் ஒரு புதிய முன்னெடுப்பில் சன் ஃபீஸ்ட் மேரி லைட்-ம் பிரபல நடிகை ஜோதிகாவும் இணைந்திருக்கின்றனர். அவர்களது வீட்டிற்கு வெளியே உள்ள பெயர் பலகை போன்ற சாதாரண விஷயத்தில் தொடங்கி வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும், நிலையிலும் பகிரப்படும் அங்கீகாரத்தின் முக்கியத்துவத்தை இது வலியுறுத்துகிறது.

சன்ஃபீஸ்ட் மேரி லைட் நடத்திய ஒரு சர்வேயில் மூன்றில் இரண்டு வீடுகளில் பெயர் பலகைகளில் இரு இணையர்களின் பெயர்களும் காணப்படுவதில்லை என்பது தெரிய வந்துள்ளது. மேரி லைட் ஸ்ட்ராங் டீம்.காம் என்ற வலைதளத்திற்கு விஜயம் செய்யவும் மற்றும் பெயர் பலகை மீது இரு இணையர்களின் பெயர்களை இடம்பெறுமாறு செய்ய வாக்குறுதி வழங்கவும் நுகர்வோர்களை இந்த பிராண்டு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

தங்களது பெயர் பலகையில் தம்பதியினர் இருவரின் பெயர்களும் இடம்பெறாத தம்பதியினர், பிரத்யேகமான பெயர் பலகை வடிவமைப்பை உருவாக்குவதையும் இந்த பிராண்டு நுகர்வோர்களுக்கு ஏதுவாக்குகிறது பார்வையாளர்களோடு மேலும் பிணைப்பை ஏற்படுத்த, சன்ஃபீஸ்ட் மேரி லைட் ஸ்ட்ராங் டீம் நேம்ப்ளேட் என்ற போட்டியையும் தொடங்கியுள்ளது.

இரு இணையர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ள தங்கள் பெயர்ப் பலகையின் படத்தை இடுகையிடுவதன் மூலம் தம்பதிகள் இதில் பங்கேற்கலாம்; தங்களை ஒரு வலுவான அணியாக ஆக்குவது என்ன என்று தலைப்பில் குறிப்பிடலாம். ஒரு வலுவான அணியை உருவாக்குவது எது என்பதற்கு மிகவும் சுவாரஸ்யமான பதிலைக் கொண்ட தம்பதி சுவிட்சர்லாந்திற்கு ஒரு காதல் பயணத்தை பரிசாக வெல்ல இப்போட்டி ஒரு வாய்ப்பை வழங்குகிறது.




**மதுரை வேலம்மாள் மருத்துவமனை மூளை நரம்பியல் துறை சார்பாக மூளை பக்கவாத நோய் குறித்த விழிப்புணர்வு வாக்கத்தலான் நடை பயிற்சி மதுரை தெப்பக்குளத்தில் நடைபெற்றது. இந்த வாக்கத்தலான் போட்டியை மதுரை மாநகர காவல் ஆணையர் லோகநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கொடி அசைத்து துவக்கி வைத்தார். வேலம்மாள் மருத்துவ கல்லூரியின் முதல்வர் திருநாவுக்கரசு மற்றும் வேலம்மாள் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை முதல்வர் ரத்தினவேல், மூளை நரம்பியல் மருத்துவர் கவிதா, அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் கணேஷ்குமார், டாக்டர் அமல்ராஜ் மற்றும் மருத்துவர்கள் மருத்துவக் கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.**



**மதுரை மாநகர் தெற்கு 2- ம் பகுதி 43-வது வட்ட அ.தி.மு.க. சார்பில் வட்டச் செயலாளர்கள் எஸ்.முருகன், வி.சரவணகுமார் ஆகியோர் தலைமையில் வெங்கடபதி அய்யங்கார் தெருவில் நடைபெற்ற நிர்வாகிகள் மற்றும் பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டத்தில் பகுதிசெயலாளர் கே.கலைச்செல்வம் கட்சி வளர்ச்சி குறித்த ஆலோசனைகளை வழங்கி புதிய உறுப்பினர் அட்டைகளை வழங்கினார். அருகில் நிர்வாகிகள் பொன் இருளாண்டி, மீனாள், ராஜபாண்டி மற்றும் 43-வட்ட அ.தி.மு.க.நிர்வாகிகள் உள்ளனர்.**

## 36 வருடங்களுக்கு பிறகு இந்திய மண்ணில்
# டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து வெற்றி



**பெங்களூரு, அக். 20-**
36 வருடங்களுக்கு பிறகு இந்திய மண்ணில் நியூசிலாந்து அணி டெஸ்ட் போட்டியில் இந்தியாவுக்கு எதிரான வெற்றியை பதிவு செய்துள்ளது. இதற்கு முன்னர் 1988ஆம் ஆண்டு நியூசிலாந்து அணி இந்திய அணிக்கு எதிராக வெற்றிப் பெற்றிருந்தது. இந்த வெற்றி மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என்ற கணக்கில் நியூசிலாந்து அணி முன்னிலை பெற்றுள்ளது.

**46 ரன்களுக்கு அவுட்....**
இந்தியாவுக்கு வந்துள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இதன்படி இந்தியா- நியூசிலாந்து இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெங்களூருவில் உள்ள சின்னசாமி ஸ்டேடியத்தில் நடந்தது. மழை காரணமாக முதல் நாள் ஆட்டம் டாஸ் கூட போடப்படாமல் கைவிடப்பட்டது. 2-வது நாள் ஆட்டம் நடைபெற்றது. அதில் டாஸ் வென்ற இந்திய அணி பேட்டிங்கை தேர்வு செய்தது.முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி தனது முதல் இன்னிங்சில் 46 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது.

**107 ரன்கள் இலக்கு...**
தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை தொடங்கிய நியூசிலாந்து 402 ரன்கள் குவித்தது. நியூசிலாந்து தரப்பில் ரச்சின் ரவீந்திரா 134 ரன், கான்வே 91 ரன், டிம் சவுதி 65 ரன் எடுத்தனர். இதையடுத்து 366 ரன்கள் பின்னிலையுடன் தனது 2வது இன்னிங்சை தொடங்கிய இந்தியா 462 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. இதில் அபாரமாக ஆடிய சர்பராஸ் கான் 150 ரன்னிலும், ரிஷப் பண்ட் 99 ரன்னிலும் அவுட் ஆகினர். இதன் காரணமாக 107 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து தனது 2வது இன்னிங்சை தொடங்கியது. ஜஸ்பிரீத் பும்ரா 4 பந்துகள் வீசிய நிலையில், போதிய வெளிச்சமின்மை காரணமாக நேற்று 4ம் நாள் ஆட்டம் முடிக்கப்பட்டது.

**மழை காரணமாக...**
5வது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. மழை காரணமாக ஆட்டம் தாமதமாக தொடங்கியது. தொடக்கத்தில் டாம் லாதம் ரன் எதுவும் எடுக்காமல் பும்ரா பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். பின்னர் டெவான் கான்வே 17 ரன்களில் வெளியேறினார். தொடர்ந்து வில் யங், ரச்சின் ரவீந்திரா இருவரும் இணைந்து சிறப்பாக விளையாடினர். இதனால் நியூசிலாந்து அணி 27.3 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 107 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

**36 வருடங்களுக்கு...**
36 வருடங்களுக்கு பிறகு இந்திய மண்ணில் நியூசிலாந்து அணி டெஸ்ட் போட்டியில் இந்தியாவுக்கு எதிரான வெற்றியை பதிவு செய்துள்ளது. இதற்கு முன்னர் 1988ஆம் ஆண்டு நியூசிலாந்து அணி இந்திய அணிக்கு எதிராக வெற்றிப் பெற்றிருந்தது. இந்த வெற்றி மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என்ற கணக்கில் நியூசிலாந்து அணி முன்னிலை பெற்றுள்ளது.2வது டெஸ்ட் வரும் 26ம் தேதி தொடங்க உள்ளது.

## டோனியை சமன் செய்த ரோகித்

முதல் போட்டியில் தோல்வி கண்டதன் மூலம் சொந்த மண்ணில் அதிக டெஸ்ட் போட்டிகளில் தோல்வி கண்ட இந்திய கேப்டன்கள் பட்டியலில் விராட் கோலியை (2 தோல்வி) முந்தி டோனி, கங்குலி, சச்சினை ரோகித் சர்மா (தலா 3 தோல்விகள்) சமன் செய்துள்ளார். இந்த பட்டியலில் முதல் இடத்தில் பட்டோடி ( 9 தோல்வி) உள்ளார். அதற்கு அடுத்த படியாக 2வது இடத்தில் கபில் தேவ் மற்றும் முகமது அசாரூதின் ( 4 தோல்வி) ஆகியோர் உள்ளனர். 3வது இடத்தில் ரோகித் சர்மா, பிஷன் பேடி, எம்.எஸ். டோனி, சச்சின் டெண்டுல்கர் மற்றும் சவுரவ் கங்குலி (3 தோல்வி) ஆகியோர் உள்ளனர்.

## உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தரவரிசை:
# தொடர்ந்து முதலிடத்தில் இந்தியா

**துபாய், அக். 21-**
நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் தோல்வியடைந்தபோதிலும், இந்திய அணி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தரவரிசையில் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது.

**36 ஆண்டுகளுக்கு...**
இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி பெங்களூருவில் உள்ள சின்னசுவாமி மைதானத்தில் நடைபெற்றது. இந்த போட்டியில் நியூசிலாந்து அணி இந்தியாவை 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இதன் மூலம் நியூசிலாந்து அணி 36 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய மண்ணில் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

**வெற்றி சதவிகிதம்...**
நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் தோல்வியடைந்தபோதிலும், இந்திய அணி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தரவரிசையில் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது. இந்திய அணியின் வெற்றி சதவிகிதம் 68.06 ஆக குறைந்துள்ளது. இருப்பினும், இந்திய அணி தரவரிசையில் முதலிடத்தில் உள்ளது. அதேவேளையில், இந்தியாவை வீழ்த்தியதன் மூலம், நியூசிலாந்து அணி 6-வது இடத்திலிருந்து 4-வது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

**2-வது இடத்தில்...**
62.50 சதவிகித வெற்றிகளுடன் ஆஸ்திரேலிய அணி இரண்டாவது இடத்திலும், 55.56 சதவிகித வெற்றிகளுடன் இலங்கை அணி மூன்றாவது இடத்திலும் உள்ளன. இங்கிலாந்து, தென்னாப்பிரிக்கா, வங்கதேசம் ஆகியவை முறையே 5,6 மற்றும் 7-வது இடங்களில் உள்ளனர். பாகிஸ்தான் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் 8 மற்றும் 9-வது இடங்களில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## நியூசிலாந்துக்கு எதிரான தோல்வி:
# ரோகித் சர்மா விளக்கம்



**பெங்களூரு, அக். 21-**
நியூசிலாந்துக்கு எதிரான தோல்விக்கு குறித்து இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா விளக்கமளித்துள்ளார்.

அபார வெற்றி...
இந்தியாவுக்கு வந்துள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்டடெஸ்ட், தொடரில் ஆடி வருகிறது. இதன்படி இந்தியா- நியூசிலாந்து இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெங்களூருவில் உள்ள சின்னசாமி ஸ்டேடியத்தில் நடந்தது. 5வது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. மழை காரணமாக ஆட்டம் தாமதமாக தொடங்கியது. தொடக்கத்தில் டாம் லாதம் ரன் எதுவும் எடுக்காமல் பும்ரா பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். பின்னர் டெவான் கான்வே 17 ரன்களில் வெளியேறினார். தொடர்ந்து வில் ய்ங் , ரச்சின் ரவீந்திரா இருவரும் இணைந்து சிறப்பாக விளையாடினர் . இதனால் நியூசிலாந்து அணி 27.3 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 107 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது .

சரியாக பேட்டிங்...
இந்த வெற்றியால் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என நியூசிலாந்து அணி முன்னிலை பெற்றுள்ளது. 2வது டெஸ்ட் வரும் 26ம் தேதி தொடங்க உள்ளது. இந்த நிலையில் தோல்வி குறித்து பேசிய இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா கூறியதாவது, முதல் இன்னிங்சில் நாங்கள் சரியாக பேட்டிங் செய்யவில்லை. நாங்கள் 46 ரன்களுக்கு ஆல் அவுட் ஆவோம் என்று எதிர்பார்க்கவில்லை. இருப்பினும் இரண்டாவது இன்னிங்ஸில் பேட்டிங்கில் சிறப்பாக செயல்பட்டோம் இது ஒரு நல்ல முயற்சி. 350 ரன்கள் பின்தங்கியிருக்கும் போது,அதிகம் யோசிக்க முடியாது. ரிஷப் பண்ட் மற்றும் சர்பராஸ் கான் ஆகியோரின் பேட்டிங்கை பார்க்க மிகவும் உற்சாகமாக இருந்தது. நியூசிலாந்து அணி நன்றாகப் பந்து வீசியது, அதற்கு நாங்கள் பதிலளிக்கத் தவறிவிட்டோம். நாங்கள் மீண்டு வருவோம் என தெரிவித்தார்.

## ரிஷப் பண்ட் விளையாடுவாரா..?

முதல் டெஸ்ட் போட்டியில் காயமடைந்துள்ள ரிஷப் பண்ட் அடுத்த போட்டியில் விளையாடுவாரா..? என்பது குறித்து இந்திய கேப்டன் ரோகித் சர்மா பதில் அளித்துள்ளார்.உண்மையில் முழங்காலில் பெரிய அறுவை சிகிச்சை செய்து கொண்ட அவர் கடின காலத்தை கடந்து வந்தார். கீப்பிங் செய்யும் போது ஒவ்வொரு பந்துக்கும் நீங்கள் உட்கார்ந்து எழுந்திருக்க வேண்டும். அதனாலேயே அவரை கீப்பிங் செய்ய அனுப்பாமல் அடுத்த போட்டிக்கு தயாராக உதவலாம் என்று நாங்கள் முடிவெடுத்தோம். அவர் தனது போக்கிலான மனநிலையில் வெற்றிகரமான செயல்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளார். எனவே அவர் சுதந்திரமாக விளையாடுவதற்கு நாங்கள் ஆதரவு கொடுக்க வேண்டும் என்றார்.

## அணியில் வாஷிங்டன் சுந்தர்



நியூசிலாந்துக்கு எதிரான எஞ்சிய டெஸ்ட் தொடர்களுக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில் முதல் டெஸ்ட் போட்டிக்கான அணியில் இடம் பெற்றுள்ள வீரர்கள் அப்படியே இடம் பெற்றுள்ளனர். மேலும், இந்த அணியில் தமிழக ஆல் ரவுண்டரான வாஷிங்டன் சுந்தரும் சேர்க்கப்பட்டுள்ளார். சமீபத்தில் ரஞ்சி டிராபில் சிறப்பாக செயல்பாட்டை வெளிப்படுத்திய தன் காரணமாக அவருக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்திய அணி விவரம்; ரோகித் சர்மா (கேப்டன்), ஜஸ்ப்ரீத் பும்ரா (துணை கேப்டன்), யஷஸ்வி ஜெய்ஸ்வால், சுப்மன் கில், விராட் கோலி, கே.எல்.ராகுல், சர்பராஸ் கான், ரிஷப் பண்ட் (விக்கெட் கீப்பர்), துருவ் ஜூரெல் (விக்கெட் கீப்பர்), ரவிச்சந்திரன் அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, அக்சர் படேல், குல்தீப் யாதவ், முகமது சிராஜ்ம் ஆகாஷ் தீப், வாஷிங்டன் சுந்தர்.

## சாதனை படைத்த ஜிம்பாப்வே

டி20 உலகக் கோப்பை தொடர் 2026-ம் ஆண்டு நடைபெற உள்ளது. இந்நிலையில் இந்த தொடரில் கலந்து கொள்வதற்காக பல அணிகள் குவாலிபையர் சுற்றில் விளையாடி வருகின்றனர். அந்த வகையில் ஆப்பிரிக்க நாடுகளை சேர்ந்த அணிகள் தற்போது குவாலிபையரில் விளையாடி வருகிறது. அதில் ஜிம்பாப்வே, கென்யா, ருவாண்டா, காம்பியா, மொசாம்பிக், சீஷெல்ஸ் ஆகிய அணிகள் தங்களுக்குள் மோதுகின்றனர். இதில் நேற்று நடந்த போட்டியில் ஜிம்பாப்வே மற்றும் சீஷெல்ஸ் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற சீஷெல்ஸ் அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் விளையாடிய ஜிம்பாப்வே அணி 286 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக பிரையன் பென்னட் 91, டி மருமணி 86 ரன்கள் எடுத்தனர். இதனையடுத்து களமிறங்கிய சீஷெல்ஸ் அணி 6.1 ஓவரில் 2 விக்கெட்டுகளை இழந்து 18 ரன்கள் மட்டுமே எடுத்தது. அப்போது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. தொடர்ந்து மழை பெய்ததால் டக்வொர்த் லீவிஸ் முறைப்படி ஜிம்பாப்வே அணி 76 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. முன்னதாக இந்த போட்டியில் ஜிம்பாப்வே அணி 286 ரன்கள் குவித்ததன் மூலம் சர்வதேச டி20 கிரிக்கெட் அதிக ரன்கள் குவித்த 3-வது என்ற சாதனையை ஜிம்பாப்வே அணி படைத்துள்ளது. இந்த பட்டியலில் முதல் இடத்தில் (314) நேபாள அணி உள்ளது. 2-வது இடத்தில் (297) இந்திய அணி உள்ளது.

## 6 இடங்களில் கேமராக்களை பொருத்தி
# சிறுமியை கொன்ற சிறுத்தையை பிடிக்க வனத்துறையினர் தீவிரம்

**வால்பாறை, அக். 21-**
வால்பாறையில் சிறுமியை கொன்ற சிறுத்தையை பிடிக்க 6 இடங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்தி பணியை தீவிரப்படுத்தியுள்ளது வனத்துறை.

ஜார்க்கண்ட் மாநிலத்தை சேர்ந்தவர் ஹினில் அன்சாரி. இவருடைய மனைவி நசீரான் கதூம். இவர்கள் கோவை மாவட்டம் வால்பாறை அருகே உள்ள ஊசிமலை மட்டம் எஸ்டேட் பகுதியில் தங்கியிருந்து, அங்குள்ள தேயிலை தோட்டத்தில் தொழிலாளர்களாக வேலை பார்த்து வருகின்றனர். இந்த தம்பதிக்கு அப்சார் கதூம்(வயது 4) என்ற மகள் உண்டு.

நேற்று முன்தினம் எஸ்டேட் பகுதியை சேர்ந்த ஒருவர் இறந்துவிட்டதால், தேயிலை தோட்டத்தில் பணி இல்லை. இதனால் நசீரான் கதூம் தனது மகள் அப்சார் கதூமை அழைத்துக்கொண்டு, அங்குள்ள 14-ம் நம்பர் தேயிலை தோட்டத்துக்கு அருகில் உள்ள நிலத்தில் கீரை பறித்துக்கொண்டு இருந்தார். அப்போது அங்கு பதுங்கி இருந்த சிறுத்தை ஒன்று திடீரென சிறுமி அப்சார் கதூம் மீது பாய்ந்து தாக்கியது. தொடர்ந்து அவளை கவ்விக்கொண்டு அங்குள்ள தேயிலை தோட்டத்துக்குள் இழுத்து சென்றது.

இதை கண்டு அதிர்ச்சி அடைந்த நசீரான் கதூம் கூச்சலிட்டபடி சிறுத்தையை துரத்திக்கொண்டு ஓடினார். அவரது சத்தம் கேட்டு அங்கு சக தொழிலாளர்கள் ஓடி வந்தனர்.இதற்கிடையில் சிறுமியை தேயிலை தோட்டத்தில் போட்டுவிட்டு வனப்பகுதியை நோக்கி சிறுத்தை தப்பி ஓடியது. பின்னர் அங்கு வந்த நசீரான் கதூம் மற்றும் தொழிலாளர்கள் சிறுமியை மீட்டனர். ஆனால் சிறுத்தை தாக்கியதில் சிறுமி உயிரிழந்து இருந்தாள். இதை அறிந்து அவளது தாய் நசீரான் கதூம் கதறி அழுதார்.

இதுகுறித்து தகவல் அறிந்த வால்பாறை வனத்துறையினர் மற்றும் போலீசார் விரைந்து வந்து, சிறுமியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வால்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்நிலையில் சிறுமியை கொன்ற சிறுத்தையை பிடிக்கும் பணியில் வனத்துறையினர் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். 6 இடங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்தி சிறுத்தை நடமாட்டத்தை வனத்துறை கண்காணித்து வருகின்றனர். மேலும் தேயிலை தோட்டத்தில் உள்ள புதர்களை அகற்றவும் வனத்துறை அறிவுறுத்தி உள்ளனர்.

இதனிடையே உயிரிழந்த சிறுமியின் உடலுக்கு வால்பாறை அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது. இதனையடுத்து சிறுமியை கொன்ற சிறுத்தையை கூண்டு வைத்து பிடிக்க தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்து அதற்கான நடவடிக்கையை எடுத்து வருவதாக வனத்துறையினர் தெரிவித்துள்ளனர். உயிரிழந்த சிறுமியின் குடும்பத்தினரிடம் முதற்கட்ட நிவாரண தொகையாக வனத்துறை சார்பில் ரூ. 50 ஆயிரம் வழங்கப்பட்டது. வால்பாறையில் பட்டப்பகலில் சிறுமியை சிறுத்தை கடித்துக்கொன்ற சம்பவம் தொழிலாளர்களிடையே அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

## பீகாரில் சாமி சிலைகள் உடைப்பு:
# பொதுமக்கள் திடீர் போராட்டம்

**பாகல்பூர், அக். 21-**
பீகாரில் சாமி சிலைகள் உடைக்கப்பட்டதால் கொதித்தெழுந்த பொதுமக்கள், சான்ஹாலா காவல் நிலையத்திற்கு வெளியே திரண்டு போராட்டம் நடத்தினர்.

பீகார் மாநிலம் பாகல்பூர் மாவட்டம் சான்ஹாலா பஜாரில் உள்ள இந்து கோவிலில் சாமி சிலைகள் உடைக்கப்பட்ட சம்பவம் அப்பகுதி மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. நேற்று முன்தினம் இரவு கோவிலுக்குள் அத்துமீறி நுழைந்த மர்ம நபர்கள் இந்த செயலை செய்துள்ளனர்.

இது பற்றி காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதற்கிடையே சாமி சிலைகள் உடைக்கப்பட்டதால் கொதித்தெழுந்த பொதுமக்கள், சான்ஹாலா காவல் நிலையத்திற்கு வெளியே திரண்டு போராட்டம் நடத்தினர்.

சாலை மறியலிலும் ஈடுபட்டனர். டயர்களை எரித்து தங்கள் கோபத்தை வெளிப்படுத்தினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து அங்கு பதற்றம் உருவாகாமல் இருக்க போலீசார் பாதுகாணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். போலீசார் கொடி அணிவகுப்பு ஊர்வலமும் நடத்தினர். தற்போது நிலைமை கட்டுப்பாட்டில் இருப்பதாக காவல் துறை தெரிவித்துள்ளது.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்



**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு வழங்கும் விழாவில், சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் சேர்ந்த மொத்தம் 707 ஊராட்சிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய 1,070 தொகுப்புகளை வழங்குவதன் அடையாளமாக ஊராட்சி மன்றங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்புகளை வழங்கினார்.**

# மக்கள் மத்தியில் அ.தி.மு.க.விற்கு செல்வாக்கு அதிகரித்து வருகிறது
## நெல்லையில் எடப்பாடி பழனிசாமி பேச்சு

**நெல்லை, அக். 21-**
தி.மு.க.விற்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு சரிந்து விட்டது என்று தெரிவித்த எடப்பாடி பழனிசாமி, அ.தி.மு.க.விற்கு செல்வாக்கு அதிகரித்து வருவதாக பேசினார்.

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரத்தில் அதிமுகவின் 53வது ஆண்டு தொடக்க விழா பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைப்ற்ற இந்த பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் ஆர்.பி.உதயகுமார், இசக்கி சுப்பையா, நத்தம் விஸ்வநாதன், கடம்பூர் ராஜூ, ராஜலட்சுமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியின்போது எடப்பாடி பழனிசாமி பேசியதாவது; "மக்கள் அடிப்படையில் துவங்கப்பட்ட கட்சி அதிமுக. பிரிந்த இயக்கத்தை ஒன்றிணைத்த பெருமை முன்னாள் முதலமைச்சர் செயலலிதாவை சேரும். துவக்க விழா என்பது சாதாரணம் அல்ல. அதிமுகவை வீழ்த்த எத்தனையோ அவதாரங்களை எடுத்தார் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி. இவை அனைத்தையும் வீழ்த்தியவர்கள் முன்னாள் முதலமைச்சர்கள் எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதா.

அதிமுக 2ஆக பிரிந்து விட்டது என கூறி கொண்டு இருக்கிறார்கள். அதிமுக ஒன்றாக தான் இருக்கிறது. வேண்டுமென்றே திட்டமிட்டு கட்சியை பிளவுபடுத்த திமுக போடும் நாடகம் இது. கருணாநிதி மற்றும் அமைச்சர்கள் குடும்பத்தினர் மட்டுமே திமுகவில் பதவிக்கு வர முடியும். அதிமுகவில் மட்டுமே சாதாரண தொண்டனும் உயர்ந்த பதவிக்கு வர முடியும். விசுவாசமாக இருப்பவர்களுக்கும், உழைப்பவர்களுக்கும் பதவி கொடுக்கும் ஒரே கட்சி அதிமுக. ஜனநாயக முறைப்படி செயல்படும் கட்சி அதிமுக. அதிக உறுப்பினர்கள் கொண்ட கட்சி அதிமுக.

தமிழ்நாட்டில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆண்ட கட்சி அதிமுக. அதிமுகவிற்கு செல்வாக்கு அதிகரித்து வருகிறது. திமுக தான் மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்து வருகிறது. கூட்டணி கட்சிகளை தாங்கி நிற்கின்றது திமுக. அதிமுக சொந்த காலில் நிற்கிறது. சொந்த காலில் நிற்கின்றவர்களுக்கு தான் பலம் அதிகம். திமுக கூட்டணியில் பிரச்னை வந்துவிட்டது. திமுகவிற்கு மக்களிடத்தில் செல்வாக்கு சரிந்துவிட்டது. அதனால் தான் கூட்டணி கட்சியினர் மக்கள் பிரச்னைகளை பற்றி பேச ஆரம்பித்து விட்டனர். திமுக ஆட்சியில் கடன் மட்டும் அதிகரித்துக் கொண்டு இருக்கிறது. எந்த திட்டமும் கொண்டுவரவில்லை. திமுக ஆட்சிக்கு வரும்முன் நீட் ரத்து என சொன்னார்கள். இதுவரை நீட் ரத்துகான ரகசியத்தை உதயநிதி வெளிவிடவில்லை"

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு கவர்னர் ரவியை மாற்ற மத்திய அரசு முடிவு?

**சென்னை, அக். 21-**
தமிழக கவர்னர் ஆர்.என். ரவியை மாற்ற மத்திய அரசு முடிவெடுத்துள்ளதாக, தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் முன்னாள் மத்திய அமைச்சரும், முன்னாள் ராணுவ தளபதியுமான ஜெனரல் வி.கே.சிங் புதிய கவர்னராக நியமிக்கப்படுவார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 2021-ம் ஆண்டு முதல் தமிழக கவர்னராக ஆர்.என்.ரவி பணியாற்றி வருகிறார். அவர் மீது தி.மு.க., மற்றும் கூட்டணிக் கட்சியினர் பல்வேறு குற்றச்சாட்டுகளை கூறி வருகின்றனர். ஏற்கனவே சில முறை, கவர்னரை மாற்ற வேண்டும் என்று தி.மு.க., சார்பில் மத்திய அரசிடம் வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில் சில தினங்களுக்கு முன், இந்தி கொண்டாட்ட நிகழ்ச்சியில் தமிழ்த் தாய் வாழ்த்து பாடியபோது, சில வரிகள் தவிர்க்கப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதற்கு கவர்னரை குற்றம் சாட்டிய தமிழக முதல்வர் ஸ்டாலின், அவரை திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி இருந்தார்.

இந்நிலையில், தமிழகத்தில் கவர்னர் மாற்றப்பட வாய்ப்புள்ளது என தகவல் வெளியாகி உள்ளது. கவர்னர் ஆர்.என்.ரவி மாற்றப்பட்டு, அவருக்கு பதிலாக, முன்னாள் மத்திய அமைச்சரும், முன்னாள் ராணுவ தளபதியுமான ஜெனரல் வி.கே.சிங் நியமிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## 6 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று
# புதுச்சேரியில் ரேஷன் கடைகள் திறப்பு

**புதுச்சேரி, அக். 21-**
புதுச்சேரியில் ரேஷன்கடைகளில் இலவச அரிசி விநியோகிக்கப்பட்டு வந்தது. கடந்த காங்கிரஸ் ஆட்சியில் தரமற்ற அரிசி வழங்குவதாக 2016ல் புகார் எழுந்தது. அப்போதைய துணைநிலை ஆளுநர் கிரண்பேடிக்கும், புதுச்சேரி அரசுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இதையடுத்து ரேஷனில் அரிசி விநியோகம் செய்ய தடை விதித்தார். இதனால் ரேஷன் கடைகள் மூடப்பட்டன. மத்திய அரசின் உத்தரவுப்படி நேரடி பணபரிமாற்ற திட்டத்தின் கீழ் அரிசிக்கான பணத்தை பயனாளிகளின் வங்கியில் செலுத்தும் நடைமுறையை கொண்டுவந்தார். இதன்படி கடந்த 2019ல் ரேஷன் கடைகள் முழுமையாக மூடப்பட்டன.

இதன்படி ஒரு கிலோ அரிசி ரூ.30 என மஞ்சள் கார்டுக்கு 10 கிலோவுக்கு ரூ.300, சிகப்பு கார்டுக்கு 20 கிலோவுக்கு ரூ.600 வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது. மார்க்கெட்டில் அரிசி விலை உயர்வு உட்பட பல காரணங்களால் மீண்டும் ரேஷனில் அரிசி வழங்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தி வருகின்றனர். கடந்த மக்களவை தேர்தல் பிரச்சாரத்தின் போது பொதுமக்கள் கேள்வி எழுப்பியதால், விரைவில் ரேஷன்கடைகளில் அரிசி வழங்கப்படும் என முதல்வர் ரங்கசாமி அறிவித்தார்.

எப்போது கடைகள் திறக்கப்படும் என கேள்வி எழுந்தது. இந்நிலையில் வரும் தீபாவளிக்கு முன்பாக ரேஷன்கடைகள் திறக்கப்பட்டு தீபாவளிக்காக இலவச அரிசி, சர்க்கரை ரேஷன்கடைகள் மூலம் வழங்கப்படும் என முதல்வர் ரங்கசாமி உறுதியளித்தார். இந்நிலையில் குடிமைப்பொருள் வழங்கல் துறை மூலம் இன்று ரேஷன் கடைகள் திறக்கப்படுகிறது.

அத்துடன் தீபாவளிக்கான இலவச பத்து கிலோ அரிசி, 2 கிலோ சர்க்கரையை ரேஷன் கடை மூலம் வழங்கும் நிகழ்ச்சி மேட்டுப்பாளையம் தொழில்பேட்டை சாலையில் உள்ள கடையில் நடக்கிறது. இந்நிகழ்வில் ஆளுநர் கைலாஷ்நாதன், முதல்வர் ரங்கசாமி மற்றும் அமைச்சர்கள் பங்கேற்கின்றனர்.

இதன்படி புதுவையில் உள்ள 500க்கும் மேற்பட்ட ரேஷன்கடைகள் இன்று மீண்டும் திறக்கப்பட உள்ளன. இந்நிலையில் குடிமைப்பொருள் வழங்கல்துறை இயக்குனர் சத்தியமூர்த்தி, ரேஷன்கடை ஊழியர் சங்கங்கள், ரேஷன் கடை உரிமையாளர்களுக்கு குறிப்பாணை அனுப்பியுள்ளார். அதில், "புதுவையில் அனைத்து ரேஷன்கார்டுதாரர்களுக்கும் (அரசு ஊழியர்கள், கவுரவ கார்டுதாரர்கள் நீங்கலாக) 10கிலோ அரிசி, 2 கிலோ சர்க்கரை நேரடியாக ரேஷன்கடைகள் மூலம் வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கான்பெட் மூலம் அரிசி, சர்க்கரை கொள்முதல் செய்யப்பட்டு உள்ளது. எனவே பொதுமக்களுக்கு அரிசி, சர்க்கரை சிரமமின்றி வழங்க ஏதுவாக ரேஷன்கடைகளை தயார் நிலையில் வைத்திருக்க ஏற்பாடுகளை செய்ய வேண்டும்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

# டிராவிஸ் ஹெட் விலகல்

பாகிஸ்தான் அணி அடுத்த மாதம் ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் முதலில் நடைபெறுகிறது. முதல் ஒருநாள் போட்டி நவம்பர் 4-ம் தேதி மெல்போர்னில் தொடங்குகிறது. இந்நிலையில், பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரில் டிராவிஸ் ஹெட் விளையாடப் போவதில்லை என ஆஸ்திரேலிய கிரிக்கெட் வட்டாரங்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் இந்தியாவுக்கு எதிரான பார்டர் கவாஸ்கர் டெஸ்ட் தொடரில் மீண்டும் அணியுடன் இணைவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் வட்டாரங்கள் தரப்பில் தெரிவித்திருப்பதாவது, பாகிஸ்தானுக்கு எதிராக ஆஸ்திரேலிய அணி அடுத்த மாதம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது. இந்த தொடரில் இருந்து டிராவிஸ் ஹெட்டுக்கு ஓய்வு அளிக்கப்படுகிறது. ஒருநாள் தொடரைத் தொடர்ந்து, நடைபெறும் டி20 தொடரிலும் டிராவிஸ் ஹெட் அணியில் இடம்பெறமாட்டார். தொடர்ச்சியாக ஆஸ்திரேலிய அணிக்காக ஓய்வின்றி விளையாடி வரும் டிராவிஸ் ஹெட், அவருடைய குடும்பத்தினருடன் இந்த ஓய்வு நாள்களை செலவிடவுள்ளார். அவருக்கு இரண்டாவது குழந்தை பிறக்கவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



● சேலம் மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், சேலம் மாவட்டத்தை சேர்ந்த 385 ஊராட்சிகள், நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த 322 ஊராட்சிகள் என மொத்தம் 707 ஊராட்சிகளுக்கு 33 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய 1,070 தொகுப்புகளை கொண்டு செல்லும் வாகனங்களை, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழியனுப்பி வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், கூடுதல் தலைமைச்செயலாளர், விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர், மாவட்ட கலெக்டர் உடனிருந்தனர்.



● அ.தி.மு.க.வின் 53-வது ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட மேற்கு 3-ம் பகுதி 70-வது வட்ட அ.தி.மு.க. சார்பில் வட்ட செயலாளர் வழக்கறிஞர் பாலமுருகன் ஏற்பாட்டில், பைபாஸ் ரோடு நேரு நகரில் அ.தி.மு.க. கட்சி கொடியை, முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. ஏற்றி வைத்தார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், வி.பி.ஆர்.செல்வகுமார், கு.திரவியம், சக்திமோகன், எம்.எஸ்.கே.மல்லன், ஏ.பார்த்திபன், பைக்காரா கருப்பசாமி, பகுதி முத்துவேல், வக்கீல் தமிழ்செல்வன், பி.கே.எம்.மாரிமுத்து, பி.ஆர்.சி.மகாலிங்கம், மார்க்கெட் மார்நாடு, தங்கபாண்டி, சி.ஆர்.கதிரவன், ராஜாசீனிவாசன், இளைஞரணி கண்ணன், லக்கிமுனீஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# கேரள முன்னாள் முதல்வர் அச்சுதானந்தனுக்கு 101 வயது

## தலைவர்கள் வாழ்த்து

திருவனந்தபுரம்,அக்.21-

கேரளாவின் முன்னாள் முதல்வர் மற்றும் கம்யூனிஸ்டு கட்சியின் பழம்பெரும் தலைவர் வி.எஸ். அச்சுதானந்தன் நேற்று தனது 101-வது பிறந்த நாளை கொண்டாடினார். அவருக்கு கேரள கவர்னர் ஆரிப் முகமதுகான் மற்றும் முதல்வர பினராய் விஜயன் உள்ளிட்டோர் தங்களுடைய வாழ்த்துகளை தெரிவித்து கொண்டனர்.

இதே போன்று கோவா கவர்னர் பி.எஸ்.ஸ்ரீதரன் பிள்ளை, கேரள அமைச்சர்களான சிவன் குட்டி, கே.என். பாலகோபால் மற்றும் ஜி.ஆர். அனில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் கொள்கை உருவாக்க குழுவின் முன்னாள் உறுப்பினர் எஸ். ராமசந்திரன் பிள்ளை மற்றும் கேரள இந்திய கம்யூனிஸ்டுவின் செயலாளர் பினோய் விஸ்வம் உள்ளிட்டோர் அச்சுதானந்தனின் வீட்டுக்கு சென்று அவரை நேரில் சந்தித்து தங்களுடைய வாழ்த்துகளை தெரிவித்து கொண்டனர்.

இந்தியாவில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவரான அச்சுதானந்தன், வர்த்தக யூனியன் செயல்பாடுகளின் வழியே அரசியலுக்கு வந்தவர். கேரள சட்டசபையின் உறுப்பினராக 7 முறையும் மற்றும் கேரளாவின் 11-வது முதல்வராகவும் பதவி வகித்த அனுபவம் கொண்டவர்.

3 முறை எதிர்க்கட்சி தலைவராகவும் இருந்தவர். கட்சியின் செயலாளராக 3 முறையும், கட்சியின் கொள்கை உருவாக்க குழுவின் உறுப்பினராக நீண்டகாலம் இருந்தவர். முதல்வர், சட்டசபை உறுப்பினர் அல்லது எதிர்க்கட்சி தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்ததுடன், கம்யூனிச கொள்கைகளை தொடர்ந்து பின்பற்றுவதில் ஆர்வம்கொண்டவர்.

அவர் இடுக்கி மாவட்டத்தின் மூணாறு பகுதியில் நில ஆக்கிரமிப்புகளை நீக்குவதற்காக இயக்கம் ஒன்றை தொடங்கினார். இதனால், அவர் முதல்வராக இருந்த போது, கட்சிக்குள்ளேயே அவருக்கு எதிர்ப்பு கிளம்பியது. ஆனால், அவருடைய கட்சியின் தொண்டர்களோ அவருடைய நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருந்தனர்.

# சேலம் அருகே ஏரியில் மூழ்கி 3 பேர் உயிரிழப்பு

சேலம், அக். 21-

சேலம் அருகே ஏரியில் மூழ்கி ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் உயிரிழந்தனர். இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சேலம் மாவட்டம் நங்கவள்ளி அடுத்த கொத்திகுட்டை ஏரியில் துணி துவைப்பதற்காக அப்பகுதியை சேர்ந்த 2 பெண்கள் உட்பட மூன்று பேர் சென்றுள்ளனர். அப்போது எதிர்பாராத

விதமாக 3 பேரும் ஏரியின் ஆழமான பகுதிக்கு சென்று மூழ்கினர். அவர்களை காப்பாற்றுவதற்காக அப்பகுதியை சேர்தவர்கள் வருவதற்குள் 3 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

நீரில் மூழ்கி உயிரிழந்த ரேவதி, சிவஸ்ரீ, திவ்ய தர்ஷினி ஆகிய 3 பேரின் உடல்களையும் பிரேத பரிசோதனைக்கு போலீசார் அனுப்பி வைத்துள்ளனர்.

அவர்கள் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

மேலும், இந்த சம்பவம் தொடர்பாக, வழக்குப்பதிவு செய்துள்ள போலீசார் மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஏரியில் மூழ்கி 3 பேர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



● தீபாவளி பண்டிகைக்கு இன்னும் 10 நாட்களே உள்ள நிலையில் பொருட்களை வாங்க கடை வீதிகளில் மக்கள் கூட்டம் அலைமோதுவதை படத்தில் காணலாம். (இடம்: மதுரை விளக்குத்தூண் பகுதி)

### நெருங்கும் தீபாவளி பண்டிகை:

# தமிழகம் முழுவதும் கடை வீதிகளில் அலைமோதும் பொதுமக்கள் கூட்டம்

சென்னை,அக். 21-

தீபாவளி பண்டிகைக்கு இன்னும் 10 நாட்களே உள்ள நிலையில், தமிழகம் முழுவதும் பண்டிகையை கொண்டாட ஏதுவாக மக்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை கடைகளுக்கு சென்று வாங்கி வருகின்றனர். குறிப்பாக துணிக்கடை மற்றும் பட்டாசு கடைகளில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

சென்னை தி.நகர், ரங்கநாதன் தெருவில் புத்தாடைகள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவதற்காக மக்கள் குவிந்து வருகின்றனர்.

இதற்காக மின்சார ரெயில்களிலும், பேருந்துகளிலும் மக்கள் தி.நகருக்கு வருகை தருகின்றனர். பண்டிகை காலம் மற்றும் விடுமுறை தினம் என்பதால், மற்ற நாட்களை விட கடை வீதிகளில் மக்கள் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது. பாதுகாப்பு பணியில் போலீசார் ஈடுபட்டு வருகின்றனர்.

அதே போல, மதுரை விளக்குத்தூண் மற்றும் மாசி வீதிகளில் பொருட்கள் வாங்குவதற்காக மக்கள் தங்களது குடும்பத்துடன் குவிந்து வருகின்றனர். அவர்கள் தங்களுக்கு தேவையான புத்தாடை மற்றும் வீட்டு உபயோக பொருட்களை ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர். கடை வியாபாரிகளும் பொருட்களை தள்ளுபடி விலையில் விற்பனை செய்து வருகின்றனர்.

கூட்டம் அதிகரித்து வருவதால், அப்பகுதியில் 200-க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், மக்கள் கூடும் இடங்களில் சி.சி.டி.வி கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், கோவை, சேலம், திருச்சி, நெல்லை உட்பட தமிழகத்தின் அனைத்து இடங்களிலும் தீபாவளி விற்பனை களைகட்டி வருகிறது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருவதால், மழை இல்லாத சமயங்களில் மக்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கிச் செல்கின்றனர்.

### மாரத்தான் போட்டியில் பயிற்சி ஏதுமின்றி

# 21 கி.மீ. ஓடி சாதனை படைத்த காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா

ஸ்ரீநகர், அக். 21-

காஷ்மீரில் நடந்த மாரத்தான் போட்டியில் பயிற்சி ஏதுமின்றி அம்மாநில முதல்வர் உமர் அப்துல்லா 21 கி.மீ. தூரம் ஓடி வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

ஜம்மு-காஷ்மீரில் முதல் முறையாக சர்வதேச மாரத்தான் போட்டி நேற்று நடைபெற்றது. உலகின் பல்வேறு நாடுகளை சேர்ந்த பிரபல தடகள வீரர்கள் உள்பட 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மாரத்தான் போட்டியில் பங்கேற்றனர்.



மாரத்தான் போட்டியை ஜம்மு காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா கொடியசைத்து தொடங்கி வைத்தார். அத்துடன் அவர் அரை மாரத்தானில் பங்கேற்றார். பயிற்சி எதுவும் இன்றி ஓடத் தொடங்கிய அவர், கிலோ மீட்டருக்கு 5 நிமிடங்கள் 54 வினாடிகள் என்ற சராசரி வேகத்தில் 21 கி.மீ. ஓடி வரலாற்று சாதனை படைத்தார்.

இந்த சாதனையை அடைநதது பெருமை அளிப்பதாக கூறிய அவர், இதற்கு முன்பு 13 கி.மீ.க்கு மேல் ஓடவில்லை என்றும் கூறினார். முதல்வர் உமர் அப்துல்லா மாரத்தானில் பங்கேற்று ஓடும் போது, அவரது குடும்பத்தினர் மற்றும் சக வீரர்கள் உற்சாகப்படுத்தி ஊக்கம் அளித்தனர்.

இதுதொடர்பாக உமர் அப்துல்லா தனது டுவிட்டர் பக்கத்தில் புகைப்படங்கள் மற்றும் வீடியோவை ஷேர் செய்துள்ளார். மாரத்தானில் மற்றவர்களுடன் ஓடுவது மிகவும் வேடிக்கையாக இருந்தது. வழியில் நிறைய செல்பிகள், வீடியோக்கள் எடுத்தனர்.

என்னை சந்திப்பதற்கான சில கோரிக்கைகள், வேலை தொடர்பான சில கோரிக்கைகளும் வைக்கப்பட்டன. சில செய்தியாளர்கள் ஓடிக்கொண்டே பேட்டி எடுக்கவும் முயன்றனர். மகிழ்ச்சியாக இருக்கவோ, மன அழுத்தத்தை வெல்லவோ உங்களுக்கு போதைப்பொருட்கள் தேவையில்லை.

ஒரு கிலோ மீட்டர் ஓடுவதோ அல்லது மாரத்தானில் பங்கேற்று ஓடுவதோ நல்லது. இயற்கையான மகிழ்ச்சி மற்றும் உற்சாகத்தை அடைய இது போதும். முயற்சி செய்யுங்கள். போதைப் பொருள் இல்லாத ஜம்மு காஷ்மீருக்காக ஓடத் தொடங்குவோம். இவ்வாறு அந்த பதிவில் உமர் அப்துல்லா குறிப்பிட்டுள்ளார்.

# திருச்செந்தூரில் கந்தசஷ்டி விழா நவ. 2-ம் தேதி துவக்கம்

தூத்துக்குடி,அக். 21-

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் நவம்பர் 2-ம் தேதி கந்தசஷ்டி விழா தொடங்குகிறது.

விழாவின் முதல்நாளான நவம்பர் 2-ம் தேதி அதிகாலை ஜெயந்தி நாதப் பெருமான் யாகசாலைக்கு எழுந்தருள்கிறார்.

அன்று காலை 7 மணிக்கு யாகசாலை பூஜைகள் தொடங்குகின்றன. பகல் 2.45 மணிக்கு சுவாமி ஜெயந்திநாதர் சப்பரத்தில் எழுந்தருளி, வேல் வகுப்பு, வீரவாள் வகுப்பு முதலிய பாடல்களுடன் சண்முகவிலாசம் சேருகிறார்.

மாலை 4 மணிக்கு திருவாவடுதுறை ஆதீன சஷ்டி மண்டபத்தில் சுவாமி ஜெயந்திநாதருக்கு அபிஷேகம், அலங்காரம் நடக்கிறது.

தொடர்ந்து கிரி வீதி வழியாக உலா வந்து திருக்கோயிலை சேர்கிறார். நவம்பர் 7-ம் தேதி மாலை கோயில் கடற்கரையில் சுவாமி ஜெயந்திநாதர் எழுந்தருளி, சூரனை வதம் செய்கிறார்.

வரும் 8-ம் தேதி திருக்கல்யாண வைபவம் நடைபெறுகிறது.

# செயல்மொழிதான் நமது அரசியலுக்கு தாய்மொழி

## த.வெ.க. தொண்டர்களுக்கு விஜய் 2-வது கடிதம்

சென்னை,அக். 21-

அரசியல் களத்தில், வாய்மொழியில் வித்தை காட்டுவது நம் வேலை அன்று. நம்மைப் பொறுத்தவரை, செயல்மொழி தான் நமது அரசியலுக்கான தாய்மொழி. வி.சாலை என்னும் விவேக சாலையில் சந்திப்போம் என த.வெ.க. கட்சியின் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

வரும் 27-ம் தேதி நடைபெறவுள்ள த.வெ.க. மாநாடு குறித்து அக்கட்சியின் தலைவர் விஜய், தொண்டர்களுக்கு வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

மாநாட்டுப் பணிகளுக்கான குழுக்களும் தொகுதிப் பொறுப்பாளர்கள் பட்டியலும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நம் முதல் மாநில மாநாடான வெற்றிக் கொள்கைத் திருவிழாவின் ஏற்பாடுகளில் நீங்கள் தீவிரமாக இருப்பது எனக்கு தெரியும்.

அரசியலை, வெற்றி, தோல்விகளை மட்டுமே அடிப்படையாக கொண்டு அளவிடாமல், ஆழமான அக உணர்வாகவும், கொள்கைக் கொண்டாட்டமாகவும் அணுகப் போகும் நம்முடைய அந்தத் தருணங்கள், மாநாட்டில் மேலும் அழகுற அமையட்டும்.

அரசியல் களத்தில், வாய்மொழியில் வித்தை காட்டுவது நம் வேலை அன்று. நம்மைப் பொறுத்தவரை, செயல்மொழி தான் நமது அரசியலுக்கான தாய்மொழி. மாநாட்டுக் களப்பணிகளில் மட்டுமல்லாமல், நம் ஒட்டுமொத்த அரசியல் களப்பணிகளிலும் நாம் அரசியல்மயப்படுத்தப்பட்டவர்கள் என்ற ஆழமான எண்ணத்தை மக்கள் மத்தியில் நீங்கள் உண்டாக்குவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இந்த நெகிழ்வான நேரத்தில், முக்கியமான ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். கட்சியின் தோழர்கள் எல்லோரையும் போலவே கர்ப்பிணிப் பெண்கள், பள்ளிச் சிறுவர் சிறுமியர், நீண்ட காலமாக உடல்நலமின்றி இருப்பவர்கள், முதியவர்கள் பலரும் தமிழகத்தின் பல்வேறு ஊர்களில் இருந்து நம் மாநாட்டுக்கு வரத் திட்டமிட்டு இருப்பர்.

அவர்களின் அந்த ஆவலை நான் மிகவும் மதிக்கிறேன். உங்கள் எல்லோருடனும் அவர்களையும் மாநாட்டில் காண வேண்டும் என்ற ஆவல் தான் எனக்கும் இருக்கிறது. ஆனால், எல்லாவற்றையும்விட அவர்களின் நலனே எனக்கு மிக மிக முக்கியம்.

மாநாட்டிற்காக அவர்கள் மேற்கொள்ளும் நீண்ட தூரப் பயணம், அவர்களுக்கு உடல்ரீதியாகச் சிரமத்தை ஏற்படுத்தக் கூடும். அதனால், அவர்கள் இவ்வளவு தூரம் சிரமப்பட்டு வர வேண்டாம் என்றே அவர்களின் குடும்ப உறவாகவும் இருக்கும் உரிமையில் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஊடக மற்றும் சமூக ஊடகங்கள் வழியாக தங்கள் வீடுகளில் இருந்தே நமது வெற்றிக் கொள்கைத் திருவிழாவில் கலந்து கொள்ளலாம் என்றும் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மாநாட்டுக்கு வருகின்ற மற்ற அனைவரும், மாநாட்டுக்கு வந்து செல்லும்போது, பாதுகாப்புடன் பயணிப்பது மிக மிக முக்கியம். அதேபோல பயண வழிகளில் அரசியல் ஒழுங்கையும் நெறிமுறைகளையும் போக்குவரத்து விதிமுறைகளையும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

நாம் எதைச் செய்தாலும், அதில் பொறுப்புணர்வுடன் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டையும் காப்போம் என்பதை உணர்த்துமாறு செயல்பட்டால் தான் நம் செயல்கள் மிக நேர்த்தியாக அமையும். அரசியலுக்கும் அது பொருந்தும். நாம் எப்போதும் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாகவே இருக்க வேண்டும். எந்நாளும் இதை ஒரு கட்டுப்பாட்டு விதியாகவே கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.